# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2033 கார்த்திகை 16 திங்கட்கிழமை (02-12-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:06


## முஸ்லிம் காங்கிரஸில் தலைமைப்போட்டி உச்சக்கட்டம்

# ஹக்கீமை நீக்க கட்சிக்குள் சதி!

# அதாவுல்லா, ஹப்ரத் இடைநிறுத்தம்!

### ஒஸ்லோவிலிருந்து அவர் அவசரமாகத் திரும்புகிறார்

### விளக்கம் கேட்டு ஹக்கீம் கடிதம் தேர்தல் ஆணையாளருக்கும் அறிவிப்பு

மட்டக்களப்பு,டிசெம்பர்2

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரான அமைச்சர் ரவூப் ஹக்கீமைக் கட்சித் தலைவர் பதவியிலிருந்து நீக்க கட்சியில் பொறுப்பான உயர் பதவிகளில் உள்ளவர்கள் மேற்கொண்ட சதிமுயற்சி அம்பலமாகியிருக்கிறது. அதைத் தொடர்ந்து கட்சியின் தவிசாளர் அமைச்சர் அதாவுல்லா'வும் செயலாளர் நாயகம் ஏ.எல். எம். ஹப்ரத்தும் கட்சியிலிருந்தும் அவர்கள் வகித்து வந்த கட்சிப் பதவிகளிலிருந்தும் இடை நிறுத்தப்பட்டுள்ளனர்.

இவர்களின் இடைநிறுத்தம் பற்றித் தேர்தல் ஆணையாளருக்கும் அறிவிக்கப்பட்டுவிட்டது.

இன்று ஆரம்பமாகும் மூன்றாவது சுற்று சமாதான மாநாட்டில் அரச தரப்பில் கலந்துகொள்வதற்காக அமைச்சர் ரவூப் ஹக்கீம் நோர்வே தலைநகர் ஒஸ்லோ சென்றுள்ளார். அங்கிருந்து அவர் கட்சி யாப்பு தமக்கு அளித்துள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி கட்சியின் கட்டுக்கோப்பையும் முஸ்லிம் சமுதாய நலனையும் காப்பாற்றும் பொருட்டு இருவருக்கும் இடைநிறுத்தல் கடிதங்களை அனுப்பினார். இதை அங்கிருந்தே தேர்தல் ஆணையாளருக்கு அறிவித்துவிட்டு, அவசரமாக நாடு திரும்புகிறார். இன்று மாலைக்குள் அவர் வந்து சேருவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

ரவூப் ஹக்கீம் தனது கட்சியில் எழுந்துள்ள நிலைமையை ஒஸ்லோவில் இருந்தவாறே தொலைபேசியில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் கவனத்துக்குக் கொண்டுவந்தார். ஒஸ்லோ சமாதானப் பேச்சுகளில் கலந்துகொள்ளாமல் அவசரமாக நாடு திரும்பவேண்டியிருப்பதையும் பிரதமருக்குத் தெரிவித்தார்.

(14ஆம் பக்கம் பார்க்க)

## பொ.ஐ.மு. தலைவர்கள் குழுவும் இந்தியாவுக்குச் செல்லத் திட்டம்

கொழும்பு,டிசெ.2

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் பிரமுகர்கள் அடங்கிய குழு ஒன்று நேற்று ஞாயிற்றுக்கிழமை இந்தியா புறப்பட்டுள்ளது.

இக்குழு இன்று திங்கட்கிழமை இந்தியத் தலைவர்களை சந்தித்துப் பேச இருக்கிறது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் ஆலோசனையின் பேரிலேயே அக்குழு இந்தியா செல்லுகிறது.

இந்தியப் பிரதமர் வாஜ்பாய், வெளிவிவகார, நிதி அமைச்சர்கள் ஆகியோரை இக்குழுவினர் சந்தித்துப் பேசுவர். இலங்கையின் இன்றைய அரசியல் நிலை, சர்வதேச அரசியல் நிலை ஆகியன குறித்து இச் சந்திப்பில் பேசப்படவிருப்பதாக பொ.ஐ. முன்னணியின் ஊடகப் பேச்சாளரான சரத் அமுனுகம தெரிவித்திருக்கிறார்.

அனுரா பண்டாரநாயக்க, சரத் அமுனுகம, நிமால் சிறிபால டிசில்வா, மங்கள சமரவீர, திலேஷ் குணவர்த்தன ஆகியோர் இக்குழுவில் இடம் பெறுகின்றனர்.

காங்கிரஸ் கட்சித் தலைவி சோனியா காந்தியையும் ஏனைய எதிர்க்கட்சிகளின் தலைவர்களையும் இக்குழுவினர் சந்திக்கவிருக்கின்றனர்.

அரசாங்கத்தின் சார்பில் அமைச்சர் மிலிந்த மொறகொட இந்தியாவுக்குச் சென்று இந்தியத் தலைவர்களிடம் ஒஸ்லோ பேச்சுக் குறித்து விளக்கியது தெரிந்ததே. (ஐ)

### இலங்கையின் இறைமையைப் பேணும்

## சமாதான முயற்சிகளுக்கு இந்தியா என்றும் ஆதரவு

### வெளிவிவகார அமைச்சு தெரிவிப்பு

புதுடில்லி,டிசெ.2

இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே நடைபெற்று வரும் சமாதான முயற்சிகளுக்கு இந்தியா தனது ஆதரவை தெரிவித்துள்ளது.

இலங்கையில் வாழும் அனைத்து தரப்பு மக்களினதும் நியாயமான அபிலாஷைகளை நிறைவேற்றும் வகையில் - இலங்கையின் இறையாண்மை மற்றும் ஒற்றுமையை தொடர்ந்து பேணக்கூடிய - சமாதானத்தீர்வை ஏற்படுத்தும் அமைதி முயற்சிகளை இந்தியா ஆதரிப்பதாக அறிவித்துள்ளது.

இந்தியாவின் இந்த நிலைப்பாடு நேற்றுமுன்தினம் சனிக்கிழமை புதுடில்லிக்கு விஜயம்செய்த இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜஸ்வந்சிங்கைச் சந்தித்துப் பேசிய அமைச்சர் மிலிந்த மொறகொடவிடம் தெரிவிக்கப்பட்டிருப்பதாக இந்திய வெளிவிவகார அமைச்சின் செய்திக்குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் மேற்கொள்ளப்படும் புனர்நிர்மாணப் பணிகள், அகதிகளின மறுவாழ்வு நடவடிக்கைகள், பொருளாதார வளர்ச்சிக்கான முயற்சிகளுக்கு இந்திய அரசின் ஆதரவையும் அமைச்சர் ஜஸ்வந்சிங் வெளியிட்டார் என்று அந்த செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.

சமீபத்தில் நோர்வே தலைநகர் ஒஸ்லோவில் நடைபெற்ற இலங்கை புனர்வாழ்வுக்கு நிதி உதவி அளிக்கும் மாநாடு பற்றிய விவரங்களை அமைச்சர் மிலிந்த மொறகொட ஜஸ்வந் சிங்கிடம் தெரிவித்திருக்கிறார்.

(14ஆம் பக்கம் பார்க்க)

## அனுரா பண்டாரநாயக்கா பி.பி.ஸிக்கு பேட்டி:

# இங்கு என்ன நடந்தாலும் அது இந்தியாவைத்தான் பாதிக்கும்!

### புதுடில்லிக்கு எதையும் நாங்கள் ஒளிக்கக்கூடாது

கொழும்பு,டிசெ.2

இந்தியா எமக்கு மிக நெருக்கமான அண்டை நாடு. இங்கு (இலங்கையில்) என்ன நடந்தாலும் - புலிகளோடு எத்தகைய உடன்பாடு கண்டாலும். அது முதலில் நேரடியாகப் பாதிக்கப்போவது இந்தியாவைத் தான்.

முன்னாள் சபாநாயகரும் பொ.ஐ. முன்னணி எம்பியுமான அனுரா பண்டாரநாயக்கா இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் தூதுக்குழுவுக்குத் தலைமை வகித்து புதுடில்லி புறப்பட்டு செல்லும் வழியில் நேற்று கட்டுநாயக்கா விமானநிலையத்தில் வைத்து பி.பி.ஸிக்கு அவர் பேட்டி அளித்தார்.

அப்பேட்டியில் அவர் தெரிவித்திருப்பதாவது:-

இலங்கையில் எத்தகைய தீர்வுக்கு நாங்கள் வந்தாலும் அதில் இந்தியாவுக்கு முக்கியபங்கு இருக்கிறது. நாங்கள் எப்போதோ இதனை உணர்ந்து கொண்டிருக்கிறோம். ரணில் சென்ற வருடமே இதனை உணர்ந்துகொண்டார்.

புலிகளோடு எத்தகைய உடன்



பாடு கண்டாலும் இந்தியாவைப்பொறுத்தவரையில் அது பெரிய அளவில் பாதிக்கும். இந்தியாவே எமக்கு மிக நெருக்கமான அண்டை நாடு. இங்கே நடப்பது நோர்வேயையோ அல்லது வேறெந்த நாட்டையுமோ பாதிக்காது. இந்தியாவையே பாதிக்கும். எனவே, இங்கு என்ன நடக்கிறது என்பது புதுடில்லிக்கு தெரிவிக்கப்படவேண்டும். இந்தியா இங்கு நடப்பவற்றை அறிந்திருக்கவேண்டும். அமைதி நடவடிக்கைகள் பற்றி எங்களுக்கு மிகப் பெரிய கவலைகள், சஞ்சலங்கள் இருக்கின்றன. இவற்றை நாங்கள் இந்தியாவுக்கு தெரிவிக்கவேண்டும். ஜனாதிபதியின் சொந்த அபிப்பிராயங்கள், கருத்துக்கள் யாவும் இந்தியாவுக்கு தெரிவிக்கப்படவேண்டும்.

*கேள்வி:-* அப்படியாயின் உங்களுடைய முக்கியமான கவலைகள் தான் என்ன?

*பதில்:-* ரணிலின் அரசு வேண்டுமென்றே புலிகள் தனிநாடு அமைப்பதற்கான தளத்தை நிறுவுவதற்கு அனுமதிக்கிறது. அவர்களுக்கு தனி நீதிமன்றம் இருக்கிறது; தனிப் பொலீஸ் இருக்கிறது. சொந்தமாக இராணுவம், கடற்படை அத்துடன் வரிகூட அவர்கள் அறவிடுகிறார்கள். அத்துடன் அவர்களிடம் அனைத்து ஆயுதங்களும் இருக்கின்றன. தனி நாடு ஒன்று உருவாக்கப்பட்டதைப் போல புலிகள் நடந்துகொள்கிறார்கள்.

(14ஆம் பக்கம் பார்க்க)

## மூன்றாம் சுற்றுப் பேச்சுகள் இன்று ஒஸ்லோவில் ஆரம்பம்

கொழும்பு,டிசெ.2

ஒஸ்லோ நகர் பிளாஸா ஹோட்டலில் இன்று ஆரம்பமாகும் சமாதானப் பேச்சுக்களின்போது தாய்லாந்தின் இரண்டு சுற்று சமாதான பேச்சுக்களின்போது எடுக்கப்பட்ட முடிவுகள் குறித்து விவாதிக்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

புரிந்துணர்வு உடன்படிக்கைப்படி வடக்கிலும் கிழக்கிலும் மோதல் நிலை இல்லாத ஒரு நிரந்தர இணக்கப்பாடு பற்றி அரசு - புலிகள் குழுக்கள் ஆராயவிருக்கின்றன என்று தெரிவிக்கப்பட்டது.

ஒஸ்லோ சமாதான ஆதரவு மாநாட்டில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் குறித்தும் இருசாராரும் கருத்துக்களை பரிமாறிக்கொள்வர் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை, இலங்கையின் சமாதான முயற்சிகளுக்கு சகல ஆதரவும் வழங்கப்படும் என நோர்வேயின் அரசியல் கட்சித் தலைவர்கள் தெரிவித்தனர்.

நோர்வேயில் எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் இலங்கையின் சமாதான முயற்சிகளுக்கு ஆதரவு வழங்கப்படும் என அந்நாட்டின் தொழிற் கட்சி அறிவித்தது. இன்றைய பேச்சுக்களுக்கான சகல ஆயத்தங்களும் நிறைவு பெற்றுள்ளன.

(14ஆம் பக்கம் பார்க்க)

## குழந்தைகளுக்கு தாயக உணர்வை ஊட்டுங்கள்!

### சுவிஸ் மாவீரர் நிகழ்வில் புதுவை

- லண்டனிலிருந்து ரோஜன் -

லண்டன்,டிசெ.2

உங்கள் குழந்தைகளுக்கு தாயக உணர்வை ஊட்டுங்கள். இறுதி லட்சியத்தை அடையும் வரை உங்கள் உதவியுடன் பயணத்தைத் தொடர்வோம். இது உறுதி.

சுவிற்ஸர்லாந்தில் நேற்றுமுன்தினம் இரவு மிகவும் கோலாகலமாக நடைபெற்ற மாவீர்தின நிகழ்ச்சியில கலந்துகொண்டு உரையாற்றிய விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை இவ்வாறு தெரிவித்தார்.

சுமார் 18 ஆயிரம் மாவீரர்களின் கனவு நிறைவேறும் வரை விடுதலைப் போராட்டம் ஓயாது; ஒழியாது; நிற்காது. கோப்பாய், விசுவமடு மாவீரர் துயிலும் இல்லங்களில் இருந்த அதே உணர்வு இங்கே - இந்த நிகழ்விலும் ஏற்படுகிறது.

ஆயிரக்கணக்கான மாவீரர்களின் கனவுகளை நிறைவேற்றுவோம். அரைகுறைத்தீர்வுகள் திணிக்கப்பட்டால் தனி அரசு அமைப்பதைத் தவிர வேறு வழியில்லை - என்று புதுவை இரத்தினதுரை தனது உரையில் குறிப்பிட்டார்.

சுவிஸில் பரந்து வாழும் சுமார் 8 ஆயிரத்துக்கு மேற்பட்ட ஈழத் தமிழர்கள் இந்த நிகழ்வில் கலந்துகொண்டு மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தினர்.

லண்டனில் மாவீரர் தின நிகழ்வில் அன்ரன் பாலசிங்கம் நிகழ்த்திய உரை சமகாலத்தில் சுவிஸில் நடந்த நிகழ்வில் நேரடி ஒளிபரப்புச் செய்யப்பட்டது. (ஐ)







தென்னிலங்கையிலிருந்து சுற்றுலா வந்திருந்த மாணவர்களில் ஒரு தொகுதியினர் நேற்று மாலை உதயன் பணிமனைக்கு வந்திருந்தனர். அந்த மாணவர்குழுவினரையும், அவர்களுடன் வந்திருந்த ஆசிரியர்களையும் படங்களில் காணலாம்.

### யாழ்.படைகளின் தளபதி சரத் பொன்சேகா யோசனை:

# பாதுகாப்பு வலயங்களுக்கு வெளியே வெறுமையாக 50 ஆயிரம் வீடுகள்

## இடம்பெயர்ந்தவர்களை அவற்றில் குடியமர்த்தலாம்

யாழ்ப்பாணம்,டிசெ.2

உயர் பாதுகாப்பு வலயங்களுக்கு வெளியே சுமார் 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீடுகள் ஆள்களின்றிக் காணப்படுகின்றன. உயர்பாதுகாப்பு வலயப் பகுதிகளிலிருந்து இடம் பெயர்ந்துள்ள குடும்பங்களை அந்த வீடுகளில் மீளக்குடியமர்த்த நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

யாழ்.மாவட்ட படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

குடாநாட்டில் உள்ள உயர் பாதுகாப்பு வலயங்கள் தொடர்பாகவும், அப்பகுதிகளில் மக்களை மீளக் குடியமர்த்துவது தொடர்பாகவும் நேற்று பலாலி இராணுவத் தலைமையகத்தில் கூட்டம் ஒன்று நடந்தது. படை அதிகாரிகளும் மனித உரிமை ஆணைக் குழு அதிகாரிகளும் அதில் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் யாழ்.மாவட்ட படைகளின் தளபதி சரத் பொன்சேகா உரையாற்றினார். அவர் மேலும் கூறியதாவது:-

நாட்டில் இடம்பெற்ற இனரீதியான யுத்தம் நிறுத்தப்பட்டு தற்போது அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டிருக்கிறது. சமாதானத்துக்கான பேச்சு நடைபெற்று வருகின்றது.

எனினும், இராணுவத்திற்கெதிரான அச்சுறுத்தல் இதுவரை தணியவில்லை. இதனால்தான் உயர் பாதுகாப்பு வலயங்களில் இருந்து படைகளை உடனடியாக வெளியேற்ற முடியாது என்று கூறி வருகின்றோம்.

தற்போது இடம்பெற்றுவரும் பேச்சுக்களின் மூலம் நிரந்தர சமாதானம் ஏற்படுத்தப்பட்ட பின்புதான் உயர் பாதுகாப்பு வலயத்தை நீக்குவதற்கும், அப்பகுதிகளில் மக்களை மீளக் குடியமர்த்துவதற்கும் நடவடிக்கைகள் மேறகொள்ளப்படும்.

உயர் பாதுகாப்பு வலயத்திற்கு வெளியேயுள்ள சுமார் 700 வீடுகளில இராணுவத்தினர் முகாம் அமைத்துத் தங்கியுள்ளனர். அவற்றில் இருந்து முகாம்களை அகற்றி அவற்றை உயர் பாதுகாப்பு வலயத்தினுள் கொண்டு செல்வதற்கு பெருமளவு நிதி தேவையாகவுள்ளது.

இது தொடர்பாக அரசிடம் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் - அரசு நிதி ஒதுக்கீடு செய்து தரும்பட்சத்தில் - இப்பகுதிகளில் உள்ள இராணுவ முகாம்கள் அனைத்தும் அகற்றப்படும் என்று தளபதி பொன்சேகா தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலில் மனித உரிமை ஆணைக்குழுவின் தலைவர் ஹொரப்பிரி குணதிலக, மனித உரிமை ஆணையாளர்களான என்.செல்வக்குமரன், தேவநேசன் நேசையா, மனோ கரிமுத்தெட்டுகம மற்றும் மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். மாவட்ட இணைப்பாளர் ஆர்.பி.சந்திரசேகரா ஆகியோரும் கடற்படையைச் சேர்ந்த கொமாண்டர் உபசேகரா, பிரதிப் பொலீஸ்மா அதிபர் விதாரண ஆகியோரும் கலந்துகொண்டனர்.

(ஐ-5)

### காரைநகர் சுற்று வீதியில் போக்குவரத்து

காரைநகர்,டிசெ.2

காரைநகர் சுற்றுவீதியில் இதுவரை கடற்படையினரால் போக்குவரத்துக்கு தடைவிதிக்கப்பட்டிருந்த பகுதியூடாக நேற்றுமுதல் பஸ் போக்குவரத்து ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

மேற்கு வீதியில் இதுவரை ஐயனார் கோவிலடிவரை மட்டுமே போக்குவரத்து அனுமதிக்கப்பட்டு வந்தது. நேற்றுமுதல் சுற்றுவீதியூடான போக்குவரத்து கட்டுப்பாடுகளன்றி அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

1991 ஏப்ரல் முதல் இந்த வீதியின் ஒருபகுதி கடற்படையினரால் மூடப்பட்டிருந்தது. (ஐ)

### வீதியோரக்கடைகள் அகற்றப்பட்டன

யாழ்ப்பாணம்,டிசெ.2

யாழ்.நகரில் வீதியோரக் கடைகள் நேற்று அவ்விடங்களில் இருந்து முற்றாக அகற்றப்பட்டன.

இவ் வீதியோரக்கடைகளினால் நகரப்பகுதியில் ஏற்பட்ட இடநெருக்கடிகளைத் தவிர்க்குமுகமாக, இக்கடைகள் அனைத்தையும் அப்புறப்படுத்தி, இக்கடைகளை முனீஸ்வரன் வீதிப் பகுதியில் நடத்துவதற்கும், யாழ். மாநகரசபையினால் தீர்மானிக்கப்பட்டிருப்பது தெரிந்ததே. (ஐ-15)

# இலங்கை - இந்திய கடத்தல்கள் பெருமளவு குறைந்து விட்டன

### அரசு - புலிகள் ஒப்பந்தத்தின் ஒரு நன்மை

புதுடில்லி,டிசெ.2

இலங்கைக்கும் தென்னிந்தியாவுக்கும் இடையிலான கடத்தல் நடவடிக்கைகள் வெகுவாகக் குறைந்துவிட்டன. அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டதை அடுத்தே கடத்தல்கள் குறைந்திருக்கின்றன என்று இந்தியப் பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்திருக்கின்றனர்.

தமிழ்நாடு, பாண்டிச்சேரி கடற்பிரதேச கடற்படை அதிகாரி பி.ஹரி, நேற்றுமுன்தினம் நடத்திய செய்தியாளர்கள் சந்திப்பில் கடத்தல் நடவடிக்கைகள் குறைந்துவிட்டன என்பதைத் தெரிவித்தார்.

மன்னார் குடாக்கடலிலும் பாக்கு நீரிணையிலும் கடந்த காலங்களில் மாதாந்தம் 70 வரையிலான கடத்தல் சம்பவங்கள் இந்தியக் கடற்படையினரால் கண்டுபிடிக்கப்பட்டன என்றும், இப்பொழுது அவை பெருமளவில் குறைந்துவிட்டன என்றும் அவர் மேலும் சொன்னார்.

(ஐ)

# புலிகள் மீதான தடையை அமெரிக்கா இனியும் வைத்திருப்பதில் அர்த்தமில்லை

### 'பொஸ்டன் குளோப்' கருத்து

நியூயோர்க்,டிசெ.2

விடுதலைப் புலிகள் மீது அமெரிக்காவில் விதிக்கப்பட்டுள்ள தடை நீக்கப்படவேண்டுமென்று 'பொஸ்டன் குளோப்' என்னும் அமெரிக்கப் பத்திரிகை நவம்பர் 10 ஆம் திகதி அதன ஆசிரியர் தலையங்கத்தில் எழுதியுள்ளது.

அத்தலையங்கத்தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:-

இலங்கையின் உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்திருக்கிறது. பேச்சு மூலமான தீர்வு நெருங்கிக்கொண்டிருக்கிறது. இதனை இலங்கையிலுள்ள அமெரிக்கத் தூதரகம் பாராட்டியுள்ளது. இந்நிலையில், அமெரிக்க அரசு தனது ஒத்துழைப்பை நடைமுறையில காட்டுவதற்கு முன்வரவேண்டும். புலிகள் மீதான தடையை இலங்கை அரசு நீக்கிவிட்டது. இலங்கை அரசின் வேண்டுதலின் பேரிலேயே அமெரிக்கா புலிகளைத் தடைசெய்திருக்கிறது. இலங்கை அதிகாரிகள் புலிகளுடன் பேச்சுக்களை நடத்திவரும் சூழலில் அமெரிக்கா தடைவிதித்திருப்பதில் அர்த்தமேதுமில்லை.

சுதந்திர தாயக கோரிக்கையை புலிகள் கைவிட்டுவிட்டார்கள். பிரதான அரசியல் நீரோட்டத்தில் கலந்துவிடப் போவதாக அறிவித்துள்ளனர். அடிப்படையான அரசியல் கட்டமைப்பு பற்றிய பேச்சுக்களிலும் ஈடுபட்டுள்ளனர். சமஷ்டி அல்லது கூட்டாட்சி முறையை அமெரிக்காவில் வதியும் ஈழத்தமிழ்க் குழுக்கள் நீண்டகாலமாக கருத்திற கொண்டிருந்தன. இலங்கையின் நீண்ட கோர நிகழ்வுகள் இவ்வழிகளில் தீர்க்கப்பட்டுவிடும்.

- இவ்வாறு அப்பத்திரிகை அபிப்பிராயம் தெரிவித்துள்ளது. (ஐ)

# பிரதான சந்தைக் கட்டடத்தை அகற்ற முடிவுசெய்யப்படவில்லை

### மாநகரசபை உறுப்பினர் தகவல்

யாழ்ப்பாணம்,டிசெ.2

நல்லூர் பொதுச்சந்தையில் புதிய கட்டடம் எதனையும் அமைப்பதற்காக பழைய சந்தைக் கட்டடத்தை இடித்து அழிக்க திட்டமிடப்படவில்லை என்று யாழ்.மாநகரசபை உறுப்பினர் முகுந்தன் அறிவித்திருக்கிறார்.

தமிழர் விடுதலைக் கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒதுக்கியிருக்கும் 6 லட்சம் ரூபா நிதி மூலம் மூன்று கடைகள் கொண்ட ஒரு கட்டடம் மட்டுமே சந்தையில் அமைக்கப்படவுள்ளது என்றும் -

நல்ல நிலையில் உள்ள சந்தையின் பிரதான கட்டடம் எக்காரணத்தைக் கொண்டும் இடிக்கப்படமாட்டாது என்றும் -

அவர் தெரிவித்திருக்கிறார்.

பிரதான சந்தைக் கட்டடத்தை இடித்தழிக்க திட்டமிடப்பட்டிருப்பதான தகவல் கட்சியின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டிருப்பதாகவும் - அவ்வாறு வெளியான தகவல்களில் உண்மை இல்லை என்றும் -

நல்லூர் பொதுச்சந்தை புனரமைப்பு தொடர்பாக மாநகரசபையின் அடுத்த கூட்டத்தில் ஆராயப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

(ஐ-ரி)

### வீட்டில் வீடியோ படம் பார்த்த சமயம்:

# மூன்று வயதுச் சிறுமி மின் தாக்கி மரணம்!

வீடியோவில் சினிமாப் படம் பார்ப்பதற்காகச் செய்யப்பட்ட வயர் இணைப்பிலிருந்து மின் பாய்ந்ததில் மூன்று வயதுச் சிறுமி ஒருத்தி உயிரிழந்தாள்.

இச்சம்பவம் பிரான்பற்று கிராமத்தில் கடந்த வெள்ளியன்று இடம்பெற்றது.

வீட்டில் இருந்தோர் சினிமாப் படம் பார்த்துக் கொண்டிருக்க பிரஸ்தாப சிறுமி மின் வயரை கையினால் பற்றி விளையாடிக்கொண்டிருந்த சமயம் மின் தாக்கியதாகக் கூறப்படுகிறது.

உடனடியாக யாழ்.போதனா ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்ட சிறுமி அங்கு உயிரிழந்தாள்.

மரண விசாரணையின் பின் சடலம் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டது.

பிரான்பற்றைச் சேர்ந்த ரூபன் சிவகலா என்ற சிறுமியே இவ்வாறு பரிதாபகரமாக உயிரிழந்தாள்.

(ஐ-135)

# ஜி.சீ.ஈ சாதாரணதர பரீட்சை இன்று ஆரம்பம்

ஜி.சீ.ஈ சாதாரணதரப் பரீட்சை இன்று ஆரம்பமாகின்றது. நாடு முழுவதிலுமுள்ள 3 ஆயிரத்து 894 பரீட்சை நிலையங்களில் 5லட்சத்து 13ஆயிரம் பரீட்சார்த்திகள் இம்முறை பரீட்சைக்குத் தோற்றுகின்றனர். இவர்களுள் 3 லட்சத்து 83ஆயிரம் பேர் பாடசாலை மாணவர்களும் ஏனையோர் தனிப்பட்ட பரீட்சார்த்திகளும் ஆவர்.

சகல பரீட்சை நிலையங்களிலும் ஆயுதம் தரித்த பொலீஸார் காவல் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இவர்களுக்கு மேலதிகமாக இரகசிய பொலீஸாரும் கடமையில் ஈடுபடுத்தப்படுவர். தேசிய அடையாள அட்டை இல்லாத பரீட்சார்த்திகள் தபால் திணைக்கள அடையாள அட்டையைக் கொண்டு செல்ல வேண்டும். இவை இரண்டும் இல்லாதவர்கள் அரச அதிபர் அல்லது கிராமசேவகர்களால் உறுதிப்படுத்தப்பட்ட இரண்டு புகைப்படங்களை உடன்கொண்டு செல்லவேண்டும். பரீட்சை விதிகளை மீறுபவர்களுக்கும், ஆள்மாறாட்டம் செய்பவர்களுக்கும், அவர்களுக்கு உதவுபவர்களுக்கும் எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என பரீட்சை ஆணையாளர் அறிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் இந்தப் பரீட்சைக்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என்று வலயக் கல்விப்பணிப்பாளர்கள் தெரிவித்தனர்.

(ஐ)

மன்றம் யாழ்ப்பாணம்.



# ரமழான் தானம்பெற முண்டியடித்ததில் பெண்கள், சிறுவர்கள் என 30பேர் பலி!

## பங்களாதேஷில் நேற்று நடந்த துயரச்சம்பவம்

டாக்கா,டிசெ.2

பங்களாதேஷில் சனநெருக் கடிக குள் சிக்கி பெண்களும், குழந்தை களுமாக 30பேர் உயிரிழந்தனர்.

தலைநகர் டாக்காவில் இருந்து 335 கிலோமீற்றர்கள் தொலைவில் உள்ள கைபந்தா நகரில் இந்தத் துய ரச்சம்பவம் நேற்று இடம்பெற்றது.

ரமழான் நோன்பையொட்டி பணக் காரத்தொழிலதிபர் ஒருவர் ஏழை மக களுக்கு உடுபுடைவைகளைத் தான மாக வழங்கப்போவதாக அறிவித்தி ருந்தார்.

இதனால் ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்த பெண்களும் பிள்ளைகளு மாக நூற்றுக்கணக்கானவர்கள் அந் தத் தொழிலதிபரின் வீட்டுக்கு வெளியே திரண்டனர். பகல் பொழு தில் வீட்டுக்குச் செல்லும் பாதை யின் 'கேற்'றுகளை பணியாளர்கள் திறந்தனர். அந்தச்சமயத்தில் தான மாக வழங்கப்படவிருந்த உடுபுடை வைகளை பெறும் ஆவலில் 'கேற்' வழியாக மக்கள் முண்டியடித்து நுழைந்தனர் அப்போது 26 பெண் களும் 4 சிறுவர்களும் நெரிசலில் சிக்கி உயிரிழந்தனர்.

சுமார் 2 ஆயிரம் பேர் ஒரு சிறிய வாசல் வழியாக முண்டியடித்து நுழைந் ததாலேயே இந்த அனர்த்தம் நிகழ்ந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

30 சடலங்கள் மீட்கப்பட்டதாக வும் -

மேலும் பலர் காயமடைந்து மருத் துவமனையில் சேர்க்கப்பட்டதாக வும்-

அப்பகுதிக்குப் பொறுப்பான பொலீஸ் அதிகாரி தெரிவித்தார்.

தானம் பெறுவதற்காக இரவிர வாக பொதுமக்கள் தொழில்திபரின் வீட்டு முன்பாகக் காத்து நின்றதாக வும் -

'கேற்'திறக்கப்பட்டதும் முண்டி யடித்தவர்களின் பாரத்தைத் தாங் காது சுற்றுமதிலின் ஒரு பகுதி இடிந்து வீழ்ந்ததாகவும் -

நேரில் கண்ட ஒருவர் தெரிவித் தார்.

இச்சம்பவம் தொடர்பாக தொழி லதிபரின் இளையசகோதரனும், காவ லாளியும் கைது செய்யப்பட்டுள்ள னர். கவனக்குறைவு காரணமாக உயிரிழப்புகள் ஏற்படக் காரணமாக இருந்ததாக இவர்கள் இருவர் மீதும் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

ரமழான் நோன்புக்காலத்தில் வழங்கப்படும் தானத்தை பெறுவதற் காக மக்கள் முண்டியடிக்கும் போது உயிரிழப்புக்கள் ஏற்படுவது பங்களா தேஷில் அடிக்கடி இடம்பெறும் அனர்த்தம் என்று கூறப்படுகிறது. (ஓ)



பங்களாதேஷில் நேற்று நடந்த துயரச் சம்பவத்தில் உயிரிழந்த சிறுவன் ஒருவனின் தாயார் கதறியழும் காட்சி.



இந்தியாவின் கேரள மாநிலம் சபரிமலை ஐயப்பன் ஆலயத்தில் கடந்த சனிக்கிழமை கொடியேற்றத் திருவிழா இடம்பெற்றபோது எடுக் கப்பட்ட படம்.

# மோப்பநாய் மூலம் சோதனை: மலேசிய அமைச்சர் கண்டனம்

கடந்த ஒக்டோபர் மாதம் இந் தோனேசியாவின் பாலித்தீவில் நடந்த குண்டு வெடிப்புச் சம்பவத்தில் ஏரா ளமான ஆஸ்திரேலியர்கள் உட்பட 200 பேர் பலியானார்கள். இதைத் தொடர்ந்து ஆஸ்திரேலியாவில் பாது காப்பு ஏற்பாடு பலப்படுத்தப்பட்டு இருக் கிறது. இந்த நிலையில் மலேஷியப் பெண் அமைச்சர் ரபிதா அஜிஸ் உலக வர்த்தக மாநாட்டில் கலந்து கொள்வதற்காக சிட்னி சென்றார்.

அப்போது விமான நிலையத்தில் அவரது பயணப் பெட்டிகளை மோப்ப நாய் மூலம் அதிகாரிகள் சோதனை செய்தனர். இதனால் ரபிதா எரிச்சல் அடைந்தார். நாய் மூலம் சோதனை செய்வது அவமானம் என்று தடுத்து விட்டார். விமான நிலையத்தில் இருந்து தங்கும் விடுதிக்குச் சென் றார். அங்கும் மோப்பநாய் வேட்டை தொடர்ந்தது. இதற்கு ரபிதா கடும் கண்டனம் தெரிவித்து இருக்கிறார்.

ஆஸ்திரேலியர்கள் உணர்ச்சி யற்றவர்கள். இஸ்லாமிய நெறிமுறை களுக்கு மாறாக நடந்து கொள்கின் றார்கள் என்று கோலாலம்பூர் திரும் பிய அவர் குற்றம் சாட்டி இருக்கிறா.

இவரை தீ நாக்கு உள்ளவர் என்று மலேசியாவில் உள்ள வெளி நாட்டு பத்திரிகையாளர்கள் வர்ணிப் பது உண்டு என்பது குறிப்பிடத்தக் கது. (ஒ)

# உலகில் முதல் குளோனிங் குழந்தைக்கு அமெரிக்கா ~ இத்தாலி இடையே போட்டி

வாஷிங்ரன்,டிசெ.2

'குளோனிங்' முறையில் ஆடு, மாடு, பன்றி போன்ற விலங்குகள் இதுவரை உருவாக்கப்பட்டுள்ளன. இப்போது 'குளோனிங்' முறையில் மனிதர்களை உருவாக்கும் ஆய்வு நடந்து வருகிறது.

இத்தாலியைச் சேர்ந்த டாக்டர் செவரினோ ஆன்டிநோரி என்பவர் 'குளோனிங்' மூலம் குழந்தையை உருவாக்கி வருவதாக அறிவித்தார். இந்தக் குழந்தையைத் தாங்கியுள்ள தாய்க்கு ஜனவரி மாதம் பிரசவம் நடக்கும் என்று அவர் கூறியிருந் தார்.

இந்தநிலையில், அமெரிக்க விஞ ஞானிகளும் 'குளோனிங்'மூலம் குழந் தைகளை உருவாக்கும் ஆய்வு நடத் தியது தெரியவந்துள்ளது. அமெ ரிக்க விஞ்ஞானி பிரிகட்டி போய்ஸ் லியர் என்பவர் 'குளோனிங்' குழந் தையை உருவாக்கி இருக்கிறார். இதுபற்றி அவர் கூறும்போது, 10 பெண்கள் 'குளோனிங்' மூலம் கருத் தரிக்க ஆய்வு நடந்தது.

இதில் 10 பெண்கள் கர்ப்பமானார் கள். இவர்களில் அமெரிக்க பெண் ஒருவருக்கு வருகிற கிறிஸ்மஸ் தினத் துக்குள் பிரசவமாகிவிடும். அவரது வயிற்றில் உள்ளது 'குளோனிங்' பெண் குழந்தையாகும் இந்தக் குழந்தை பிறக்கும்போது உலகிலேயே முதல் 'குளோனிங்' குழந்தை என்ற பெரு மையைப் பெறும் எனத் தெரிவித்தார்.

விஞ்ஞானி பிரிகட்டி போய்ஸ் லியர், அமெரிக்காவில் உள்ள 'ரேலி யன்' என்ற அமைப்பைச் சேர்ந்தவர். பிற கிரகங்களில் மனிதரைப் போன்று உயிரினங்கள் இருக்கின்றன என்றும், இவை மனிதனைவிட சக்தி வாய்ந் தவை என்றும் ரேலியன் அமைப்பி னர் நம்புகின்றனர்.

அயல் கிரகவாசிகள்தான் மனி தனை உருவாக்கி பூமியில் நடமாட விட்டுள்ளதாகவும் அவர்கள் நம்பு கின்றனர். (ஒ)



15ஆவது உலக எய்ட்ஸ் தினம் நேற்று உலகம் முழுவதும் அனுஷ்டிக்கப்பட்டது. இத்தினத்தையொட்டி ஐ.நா.வெளியிட்ட அறிக்கையில் 'எய்ட்ஸ்' நோய் தொற்றுக்குள்ளானவர்களை ஒதுக்கும் பழக்கத்தை மனித சமுதாயம் கைவிடாத வரை எய்ட்ஸ் நோயை முற்றாக ஒழிக்க மேற்கொள்ளப்படும் முயற்சிகள் வெற்றிய ளிக்கப்போவதில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

எய்ட்ஸ் தாக்கம் இருப்பதை சமீபத்தில்தான் ஒப்புக்கொண்ட சீனாவில் நேற்று இடம்பெற்ற எய்ட்ஸ் விழிப்புணர்வுப் பேரணியில் ஒரு காட்சியை படத்தில் காணலாம்.

# காதல் விவகாரத்தில் அடிதடி; 3 பேர் நிர்வாண ஊர்வலம்!

ஜெய்ப்பூர்,டிசெ.2

இந்தியாவின் ராஜஸ்தான் மாநி லத்தில் காதல் விவகாரம் தொடர்பாக ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்று பேர் நிர்வாண ஊர்வலம் இழுத்துச் செல்லப்பட்டனர்.

அதிர்ச்சிதரும் இச்சம்பவம் ராஜஸ் தான் மாநிலம், சிட்டரோகார் மாவட் டம் அஞ்சன் கேதா கிராமத்தில் நடந் துள்ளது. செயின் சிங் என்பவரின் மகள், கிஷோர் சிங்கின் உறவினரைக் காதலித்தாராம். இதனால் ஆத்திரம டைந்த செயின் சிங், கிஷோர், அவ ரது மனைவி, தாய் ஆகியோரை அடித துத் துன்புறுத்தி, நிர்வாணப்படுத்தி ஊர்வலமாக இழுத்துச் சென்றாராம். இது தொடர்பாக செயின் சிங் உள் ளிட்ட 8பேர் கைது செய்யப்பட்டுள் ளனர். (ஓ)

# பிறந்து இறந்த குழந்தைகளின் பெயரில் போலிக் கடவுச்சீட்டுகள்!

## பிரிட்டனில் மோசடி அம்பலம்

லண்டன்,டிசெ.2

சிலஆண்டுகளின் முன்னர் பிறந்து ஒருவருடத்துக்குள் இறந்த ஆயிரத் துக்கும் மேற்பட்ட குழந்தைகளின் பிறந்த திகதி, பெயர் ஆகியவற்றைப் பயன்படுத்தி அதன்மூலம் போலிக்கட வுச் சீட்டுக்களைப் பெறும்பன்ற மோசடி ஒன்று பிரிட்டனில் அம்பலமாகியுள் ளது. நாடாளுமன்ற அறிக்கை இத னைத் தெரிவிக்கின்றது.

கடவுச்சீட்டு அலுவலகத் தகவல் களை வைத்துப் பொலீஸார் நடத் திய விசாரணையில் இந்த ஊழல் கண்டுபிடிக்கப்பட்டது. எனினும், ஆள்பற்றாக்குறை காரணமாக பொலீ ஸார் இதுவரை இந்த ஊழல் தொடர் பாக 39பேரை மட்டுமே கைது செய் துள்ளனர்.

இந்தப் போலிக்கடவுச்சீட்டுக்களைப் பயன்படுத்தி பிரிட்டனுக்குள் நுழைப வர்கள் எந்தவித சிரமமும் இன்றி பிரிட் டிஷ் குடிமக்களாகவே வாழும் வசதி இருப்பதாகக் கூறப்படுகின்றது. இது தீவிரவாதிகளுக்கு மிகவும் வாய்ப் பாக அமைந்துள்ளதாகக் கூறப்படுகின் றது. (ஓ)

# வீரப்பனிடம் தூதுசெல்ல வசதியாக மணிக்கு மேலும் ஒரு வழக்கில் பிணை அனுமதி கிடைத்தது

மைசூர்,டிசெ.2

இந்தியாவில் கொளத்தூர் மணி மீதான வழக்கில் கொள்ளேகால் நீதி மன்றம் நிபந்தனைப் பிணை வழங்கி யது. மற்றொரு வழக்கில் பிணை பெறுவதற்காக இன்று மைசூர் நீதி மன்றில் மனுத் தாக்கல் செய்யப்படு கிறது.

உலக அரங்கில்

சந்தன மரக்கடத்தல் வீரப்பனுக்கு வெடி மருந்துகள் விநியோகித்த தாக தந்தை பெரியார் திராவிடர் கழகத் தலைவர் கொளத்தூர் மணி மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள் ளது. கொள்ளேகால் நீதிமன்றத்தில் அவர் மீது 2வழக்குகள் நடந்து வருகின்றன.

இவ்வழக்குகளில் தனக்கு பிணை வழங்கும்படி கொளத்தூர் மணி மனுத் தாக்கல் செய்தார்.

இந்தப் பிணை மனுக்கள் மீதான விசாரணையில் இரு தரப்பு வாதங் களையும் கேட்ட பின்னர் நீதிபதி நடராஜ், ஒரு வழக்கில் மணியை நிபந்தனைப் பிணையில் செல்ல அனு மதி அளித்தார்.

மற்றொரு வழக்கில், பிணை வழங் குவதற்கு கொள்ளேகால் நீதி மன் றத்துக்கு அதிகாரம் இல்லை என்று நீதிபதி அறிவித்தார்.

இதையடுத்து இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட பிணை மனுவை மீளப் பெற்றார் மணியின் சட்டத்தரணி பிரகாஷ்.

இந்த வழக்கில் பிணை பெறுவ தற்காக மைசூர் நீதிமன்றத்தில் இன்று மனுத்தாக்கல் செய்யப்போவதாக பிர காஷ் கூறினார்.

மணி மீது கர்நாடகத்தில் பதிவு செய்யப்பட்ட 6 வழக்குகளில் தற் போது 5 வழக்குகளுக்கு பிணை கிடைத்துவிட்டது.

மற்றய வழக்கிலும் பிணை கிடைத்துவிட்டால் சந்தனமரக் கடத் தல் வீரப்பன் பிடியில் உள்ள முன் னாள் அமைச்சர் நாகப்பாவை மீட்க கொளத்தூர் மணி காட்டுக்குள் செல்வார் என்று எதிர்பார்க்கப்படு கிறது. (ஓ)

# ஓரினத் தம்பதியர்க்கு சட்ட அங்கீகாரம்

பேர்ன்,டிசெ.2

ஓரினத் தம்பதிகளுக்கு அங்கீ காரம் அளிக்கும் வகையில் சட்டம் கொண்டுவர சுவிற்ஸர்லாந்து அரசு திட்டமிட்டுள்ளது.

இத்தகவலை சட்டத்துறை அமைச் சர் ருத் மெட்ஸ்லர் தெரிவித்தார். உத்தேச சட்டமானது ஓரினத் தம்பதிக்கு அங்கீகாரம் அளிப்பது டன் அவர்களும் பாரம்பரிய முறை யிலான தம்பதி (ஆண் - பெண்) பெறும் உரிமைகளையும், சமூகப் பாதுகாப் பையும் பெறமுடியும் என்றும் அவர் சொன்னார். (ஓ)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது ஆலய பரிபாலன சபையின் பொருளாளர்
திரு.சங்கரப்பிள்ளை யோகராசா
அவர்கள் யாழ்.மாவட்ட சமாதான நீதிவானாக நீதி அமைச்சினால் நியமிக்கப்பட்டதையிட்டு அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பரிபாலன சபையினர்
கோண்டாவில் நெட்டிலைப்பாய் பிள்ளையார் கோயில், கோண்டாவில்.
(C/25188)

# ப.நோ.கூ.சங்க கிளை முகாமையாளர்களே

உங்களுக்கு லாலாசோப் ஸ்தாபனத்தார் வழங்கும் விற்பனை அதிகரிப்பு பரிசுப்பொதி. மிக விரைவில் எதிர்பாருங்கள்.

உரிமையாளர்
*லாலாசோப் தொழிற்சாலை,*
*அச்சுவேலி.*
(C/25154)

# ஏழாவது வருட நினைவஞ்சலி

மண்ணில்
02
-
05
-
1948



விண்ணில்
02
-
12
-
1995

## திருமதி மாரிஸ் றெல்லா செபஸ்ரியன்

(தவமணி)

எமது நலனுக்காகத் தன்னையே அர்ப்பணித்த தவமணியே!
உமது நினைவு எம் நெஞ்சில் என்றும் நிலைத்திருக்கும்!

இன்று (02.12.2002) திங்கட்கிழமை காலை 6.30 மணிக்கு யாழ். அருள் ஆச்சிரமத்தில் நடைபெறும் திருப்பலியில் பங்கு பற்றி ஆன்ம ஆறுதலுக்காக ஜெபிக்க வேண்டுகிறோம்.

பிரிவால் துயருறும்:
யூட் கொணரி, எதல் கரோலின், எல்விஸ் கிளமன்ற், றெக்ஸ், செபஸ்ரியன்.
*இல.215, ஆஸ்பத்திரி வீதி,*
*யாழ்ப்பாணம்.*
(11258)

## ஆண்டு விழா

யாழ்ப்பாணம்,டிசெ.2

யாழ்.மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் 12ஆவது ஆண்டு நிறைவுவிழா இன்று திங்கட்கிழமை காலை 10 மணிக்கு தலைவர் அ.நல்லதம்பி தலைமையில் நடைபெறவுள்ளது. (எ-10)

## சண்டிலிப்பாயில் சமுர்த்தி சங்கங்கள்

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் இதுவரை ஆயிரத்து 261 சமுர்த்திச் சிறுகுழுக்களும் 94 சமுர்த்திச் சங்கங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை - பண்டத்தரிப்பிலும், மானிப்பாயிலும் சமுர்த்தி வங்கிகளைத் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (எ-135)

## பண்ணைப் பகுதியில் கழிவுப் பொருள்களை அகற்றும் பணி

அரியாலை,டிசெ.2

யாழ்.பண்ணைப் பகுதியில் ரெலிகொம் பரிவர்த்தனை நிலையத்திற்கு முன்பாக கொட்டப்பட்ட கழிவுப் பொருள்களை யாழ்.மாநகராட்சியின் சுகாதாரத் தொழிலாளர்கள் நேற்று முன்தினம் முதல் அகற்றி வருகின்றனர்.

மேற்படி பகுதியில் அதுவும் வீதியோரத்தில் கொட்டப்பட்ட கழிவுப் பொருள்களினால் பெரும் துர்நாற்றம் வீசியமை குறிப்பிடத்தக்கது. (ஒ-17)

## குளத்தை புனரமைக்க கோரிக்கை

தென்மராட்சி,டிசெ.2

தூர்ந்து போகும் நிலையில் உள்ள மந்துவில் குமுக்களைக் குளத்தினை புனரமைத்துத்தருமாறு இப்பகுதி மக்கள் தென்மராட்சி பிரதேச செயலரைக் கோரியுள்ளனர்.

மந்துவில் கிழக்கு, மந்துவில் மேற்கு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்கள் இந்தக் குளத்தைப் பயன்படுத்தி வந்தனர். படையினர் இப்பகுதியில் நிலைகொண்டிருந்தவேளையில குளத்தைச் சுற்றி பல இடங்களில் காவலரண்களை அமைத்து இருந்ததால் குளத்தின் பெரும்பகுதி மண்ணினால் மூடப்பட்டுள்ளது. படையினரால் வைக்கப்பட்டிருந்த பனங்குற்றிகள் அகற்றப்படவில்லை. இதனால் குளத்தினைப் பயன்படுத்த முடியாமல் உள்ளது இக்குளத்தை திருத்தித் தருமாறு மக்கள் கோரியுள்ளனர். (ஒ-117)

# UNIVERSITY OF JAFFNA
# POST OF VICE CHANCELLOR

The Council of the University of Jaffna invites applications from, or nominations of, suitably qualified and experienced persons to manage and lead the University of Jaffna as its Vice Chancellor, after the present incumbent whose term of office comes to an end in February, 2003.

Applicants are kindly requested to note Section 34(7) of the Universities Act No.16 of 1978 which stipulates that the Vice Chancellor shall, unless he vacates office earlier or is removed from office under Sub-section 1(b) of this Section, holds office for a term of three years or until he has completed his 65th year, whichever event occurs earlier.

The Vice Chancellor is a full-time officer of the University, the principal executive officer, accounting officer and the principal academic officer thereof. He is an Ex-officio member and Chairman of both the Council and the Senate.

The successful candidate will be responsible for providing academic leadership, formulating, conducting and introducing management policies and implementing the decisions of the Council; the general administration of the University and should, therefore uphold the principles of academic excellence, transparency, accountability democratic management and effective non-partisan leadership.

Application must include a complete curriculum vitae, contact particulars with a vision for the development of the University and a brief account of what the applicant proposes to achieve if appointed for the Post of Vice Chancellor.

The successful candidate should posses a record of high academic achievement including a strong research profile, proven leadership qualities and interpersonal skills to interact objectively with diverse interest groups a clear understanding of policy issues and a commitment to the effective implementation of decisions. He should also posses a deep understanding of the ethos and mission of the University including its commitment to the Community.

The Vice Chancellor is eligible to receive the highest academic salary within the University system and 10% entertainment allowance.

Applications and nominations should be addressed to the Secretary to the Council. Office of the Registrar, University of Jaffna, Jaffna, to reach the above office on or before 2003.01.18.

The following documents should accompany nominations/applications:

1. A copy of the curriculum vitae of the nominee/applicant.
2. A letter of consent from the person concemed in case of nomination.
3. A letter from the employer indicating whether the applicant/nominee could be released in the event of his/her appointment to the post.

(This will apply to applicants/nominees from Higher Educational Institutions, Public Service, Corporations and Statutory Bodies other than the Jaffna University)

Such nominations/applications may either be personally handed over or sent under registered post to the Registrar. Applicants are advised to indicate on the top left - hand corner of the envelope "Post of the Vice Chancellor, University of Jaffna".

**Registrar.**
2002.11.13

**University of Jaffna,**
**Jaffna.**

(C/25189)




உதயன்

## காணாமற்போனோரின் உறவினரின் துயரம்

1996 - 97ஆம் ஆண்டு காலப்பகுதியில் குடா நாட்டில் காணாமற்போனோரின் நிலை மற்றும் அவர்கள் தொடர்பான விவரங்களை வெளியிடுவதில் சம்பந்தப்பட்ட சகல தரப்புகளும் காட்டும் அசமந்தப் போக்கைக் கண்டித்து -

காணாமற்போனோரின் பாதுகாவலர் சங்கம் யாழ். அரச செயலகம் முன்பாக இன்றுமுதல் மீண்டும் மறியற போராட்டத்தை ஆரம்பிக்கப்போவதாக அறிவித்திருக்கிறது.

தங்கள் பிள்ளைகளுக்கு - உரித்துடையோருக்கு - என்ன நடந்தது, அவர்கள் எங்கிருக்கிறார்கள், அவர்கள் உயிருடன் இருக்கிறார்களா, இல்லையா என்ற எந்தத் தகவலும் தெரியாத நிலையில் பல நூற்றுக்கணக்கான குடும்பங்கள் கடந்த சுமார் ஆறு ஆண்டுகளாகக் கண்ணீரோடு வாழ்ந்து வருகின்றன.

குடாநாடு அரசுப் படைகள் வசமாகிய பிறகு இங்கு தோன்றிய பயங்கரமான - இருள் சூழ்ந்த - காலப்பகுதி இவர்களைப் பொறுத்தவரை இன்னும் கண்முன்னே அப்படியே தொடர்கின்றது.

தற்போதைய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையிலான பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் ஆட்சியில் நிகழ்ந்த இந்த மானிட அவலத் துக்கு இன்னமும் நீதி, நியாயம் கிட்டவில்லை.

காணாமற்போனோர் விடயம் முன்னைய ஆண்டுகளில் - முன்னைய ஆட்சிக் காலங்களில் - சூடாக - உணர்ச்சியூட்டும் விடயமாக - பரபரப்பாகப் பேசப்பட்டபோது இதோ வெட்டிப் பிடுங்கி முடிவு தரப் போகிறோம் என்ற பாணியில் களத்தில் இறங்கி மும்முரமாகக் கிளர்ந்தெழுந்த கட்சிகள் எல்லாம் இப்போது சூடு அடங்கி, தத்தம் கட்சி மற்றும் அரசியல் பணிகளில் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றன. ஆனால், அரசியல்வாதிகளால் மறக்கப்பட்ட ஒரு மக்கள் கூட்டம் தங்கள் துயரக் கதையை தமக்குள் பகிர்ந்து கொண்டு தெருத்தெருவாக நடைப் பிணங்கள் போன்று அலைந்து கொண்டிருக்கின்றது.

எங்கள் பிள்ளைகள் எங்கே என்று கேட்ட நிலைமை மாறி எங்கள் பிள்ளைகள் எப்போது இறநதார்கள் என்று கேட்டு அவர்களின் மரணத்தையாவது உறுதி செய்து கூறுங்கள், ஆத்மசாந்திக்கான கிரியைகளைச் செய்தாவது மன ஆறுதலபெற முனைவோம் என்று கேட்கும் கட்டத்துக்கு வந்திருக்கின்றனர் பெற்றோர்கள்.

இதற்காக அவர்கள் ஒன்றுகூடி பல தடவைகள் - பல வழிகளில் - மன்றாடிக் கேட்டுக் கேட்டு சலத்துப்போய் இப்போது மீண்டும் ஒரு தடவை அரச செயலகம்முன் கூடுகின்றனர்.

காணாமற்போனோரின் உறவினரின் துயரம் முடிவின்றித் தொடர்கையில் மிகத் தாமதமான ஒரு நடவடிக்கையாக இந்த விவகாரம் பற்றி ஆராய தனநபர் விசாரணைக் குழு ஒன்றை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அமைத்திருக்கிறது.

ஓய்வுபெற்ற யாழ்.அரச அதிபர் தேவநேசன் நேசையா தலைமையில் இக்குழு பணியாற்றவுள்ளது என்றும் அவரது செயலாளராக மனித உரிமைகள் ஆர்வலர் எம்.சி.எம். இக்பால் நியமிக்கப்பட்டிருக்கிறார் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இப்படி ஒரு ஆணைக்குழு இத்தனை ஆண்டுகளுக்குப் பிறகாவது நியமிக்கப்பட்டிருக்கிறது என்பது நல்ல விடயம்தான் என்றாலும் -

இந்தக் குழுவை அமைக்க முன்னரே முயற்சி எடுக்கப்பட்டது. ஆனால் நிதி உதவிகள் கிடைக்காததால் அதனை நடைமுறைப்படுத்த முடியாமற் போனது என்றும் -

தற்போது வெளிநாட்டு உதவிகள் கிடைத்திருப்பதால் ஆணைக்குழுவை அமைக்க முடிந்தது என்றும -

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் ஹொட்பிரி குணதிலக கூறியிருப்பதுதான் ஏமாற்றத்தைத் தருகிறது.

குடாநாட்டில் கைதுசெய்யப்பட்டபின் காணாமற் போனோர் விவகாரம் சர்வதேசம் முழுவதும் நன்கு தெரிந்த - ஒரு அப்பட்டமான மனித உரிமை மீறல் - ஒரு மாபெரும் மனித அவலம் - என்பது சகலரும் அறிந்தது. அத்தகைய ஒரு மனித உரிமை மீறல் விவகாரம் பற்றி விசாரிக்க ஒரு குழுவை நியமிப்பதற்கான நிதி உதவிக்காக மனித உரிமைகள் ஆணைக்குழு இத்தனை காலம் பொறுத்திருக்க வேண்டியிருந்திருக்கிறது என்ற தகவலை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் வெளியிட்டிருக்கிறார்.

தமிழ்மக்களை அடக்கி, ஒடுக்கும் போருக்கு கோடிகோடியாக பணத்தை ஒதுக்கி அந்த மக்கள் மீதான - அரசு ஆசீர்வாதத்துடன் கூடிய - உரிமை மீறல்களுக்குக் காரணமாக இருந்த அரசு - அரசுகளால் - மிகக் கொடூரமான உரிமை மீறல் என்று உறுதிசெய்யப்பட்ட ஒரு விவகாரம் பற்றி விசாரிக்க அமைக்கப்படவேண்டிய ஆணைக்குழுவுக்கு நிதி ஒதுக்கமுடியாமற்போனது வேடிக்கைதான். எனினும் மிகத் தாமதமாக நியமிக்கப்பட்டிருக்கும் இக்குழு அந்தரிக்கும் பெற்றோர்களுக்கும், உறவினர்களுக்கும் ஆறுதல் தரக்கூடிய ஒரு முடிவை - பதிலை - வழங்கும் என்று நம்புவோம், எதிர்பார்ப்போம்.

# மாணவர்களை அனுமதிக்க ஆகக் கூடுதல் கட்டணம்

## குடாநாட்டு பெற்றோர்கள் விசனம்

வலி.வடக்கு,டிசெ.2

யாழ்.மாவட்டப் பாடசாலைகளில் அடுத்த கல்வியாண்டில் பிள்ளைகளை அனுமதிப்பதற்காக பெற்றோர்களிடம இருந்து அறிவுறுத்தல்களுக்குப் புறம்பாக பெருந்தொகைப் பணம் அற விடுவதில் பல்வேறு யுக்திகளை பாடசாலை நிர்வாகங்களும் அபிவிருத்திச் சங்கங்களும கையாண்டு வருவதாகப் பாதிக்கப்பட்ட பெற்றோர்கள் தெரிவித்துள்ளனர்.

சில அரசாங்கப் பாடசாலைகளில் மாணவர்களாகச் சேர்ப்பதற்கு ஆகக் கூடுதலாக 15 ஆயிரம் ரூபாவரை கோரப்படுவதாகக் கூறப்படுகிறது.

அரசாங்கப் பாடசாலைகளில் மாணவர்களை அனுமதிப்பதற்கு கட்டணம் அறவிடக்கூடாது என கல்வி அமைச்சினால் கல்வித் திணைக்களம், பாடசாலைகள், பிரதேச செயலகங்கள் ஆகியவற்றுக்கு சுற்றறிக்கைகள் அனுப்பப்பட்டுள்ளன. ஆயினும் நடவடிக்கை எடுக்கவேண்டிய அதிகாரிகளின் மெத்தனத்தாலும் பாடசாலை நிர்வாகங்களில் வெளியாரின் தலையீடு அதிகரித்துள்ளதாலும் படிப்பில் சிறந்த மாணவர்களின் ஏழைப் பெற்றோர்கள் பெரிதும் பாதிப்படைவதாகக் கூறபடுகிறது.

தேசிய பாடசாலை ஒன்றின் அதிபர், பெற்றோர்கள் கல்வித் திணைக்களத்துக்கே சென்று முறையிட்டாலும தம்மையொன்றும் செய்யமுடியாது என்று கூறும் அளவுக்கு நிலைமை மோசமாகியுள்ளது. மாணவர்களைச் சேர்ப்பதற்கு பெற்றோர் ஆகக் குறைந்தது 3 ஆயிரம் ரூபா கட்டவேண்டும் என்று வற்புறுத்தப்படுவதாக பெற்றோர்கள் கூறுகின்றனர்.

ஏழை மக்களின் பிள்ளைகள் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி அடைந்தும் பணம் இல்லாத ஒரே காரணத்தால் தேசிய பாடசாலைகளில் கற்கமுடியாத நிலை காணப்படுகிறது. இந்த நிலை மாற்றப்படாமல் குடாநாட்டில் கல்வி முன்னேற்றம் என்பது வெறும் வாய்ப்பேச்சாகவே இருக்கும் என்று கவலை தெரிவிக்கின்றனர் பெற்றோர்கள். (ஓ-86)

# இம்மாத நடுப்பகுதியில் புற்றுநோய்ச் சிகிச்சை

## மருத்துவ நிபுணர் யாழ்.வருகிறார்

யாழ்ப்பாணம்,டிசெ.2

புற்றுநோய் சிகிச்சை நிபுணர் திருமதி வாணி உக்கிரப் பெருவழுதி இம்மாத நடுப் பகுதியில் யாழ்ப்பாணம் வருகிறார். இங்கு அவர் மருத்துவ சிகிச்சைப் பணிகளை மேற்கொள்ள வுள்ளார்.

புனரமைக்கப்பட்ட தெல்லிப்பழை புற்றுநோய் மருத்துவ மனையில் இந்த மருத்துவ சேவை முகாமை நடத்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

புற்றுநோய் பாதிப்பு இருப்பதாக ஏற்கனவே இனங்காணப்பட்ட நோயாளர்களுக்கு முதற்கட்ட சிகிச்சைகளை புற்றுநோய் சிகிச்சை நிபுணர் திருமதி வாணி உக்கிரப்பெருவழுதி வழங்குவார். இச்சிகிச்சை முகாம் இரு நாள்கள் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கான ஒழுங்குகளை தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் செல்வி நவமலர் கனகரட்ணம் மேற்கொண்டு வருகிறார்.

புற்றுநோய் சிகிச்சை முகாம் இடம்பெறவுள்ள இரு நாள்களும் தெல்லிப்பழை புற்றுநோய் வைத்தியசாலைக்கு பஸ் சேவைகளை நடத்தும்படி வடபிராந்திய போக்குவரத்துச் சபையிடம் கோரப்படவுள்ளது.

டாக்டர் திருமதி வாணி உக்கிரப்பெருவழுதி தொடர்ந்து மாதந்தோறும் யாழ்ப்பாண நோயாளர்களின் நலன்கருதி இங்கு சில நாள்கள் சிகிச்சை முகாம்களை நடத்த திட்டமிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஓ)

### மேலதிக சிகிச்சைக்குச் செல்லும்

## நோயாளரின் பயண ஏற்பாட்டை யாழ். ஆஸ்பத்திரி மேற்கொள்ளும்

யாழ்ப்பாணம்,டிசெ.2

செஞ்சிலுவைச் சர்வதேச குழுவினால் மேற்கொள்ளப்பட்டு வந்த நோயாளர் பயணசேவை நிறுத்தப்படவுள்ளது. இப்பணியை யாழ்.போதனா வைத்தியசாலை நிர்வாகம் பொறுப்பேற்கவுள்ளது.

யுத்தச் சூழ்நிலை நிலவிய கடந்த 12வருட காலமாக குடாநாட்டு நோயாளர்களை மேலதிக சிகிச்சைக்காக தென்னிலங்கைக்கு கொண்டு செல்லவும், மீண்டும் அழைத்து வரவும் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவால் கப்பற்சேவை நடத்தப்பட்டது. ஏ - 9 பாதை திறந்த பின்னர் அம்புலன்ஸ் வாகனங்கள் மூலம் நோயாளர்களின் பயண சேவையை செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு நடத்துகிறது.

இனிமேல், யாழ்.ஆஸ்பத்திரி நிர்வாகம் இப்பயண ஒழுங்குகளை மேற்கொள்ளவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

நோயாளர் பயண சேவை வாரத்தின் வியாழக்கிழமைகளில இடம்பெற்று வந்தமை குறிப்பிடத்தக்கது. (ஓ-139)

## வாந்திபேதி நோய் காரணமாக மேலும் இருவர் ஆஸ்பத்திரியில்!

யாழ்ப்பாணம்,டிசெ.2

வாந்திபேதி நோய் பரவும் அபாயம் மீண்டும் தோன்றியுள்ளது. இந்நோயினால் பீடிக்கப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தில் மேலும் இருவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்றுமுன்தினம் அனுமதிக்கப்பட்டனர்.

புன்னாலைக்கட்டுவன் மேற்கு ஈவினைப் பகுதியைச் சேர்ந்த 50 வயதுடைய ஒருவரும் ஊரெழுவைச் சேர்ந்த 28வயதுடைய இளைஞர் ஒருவருமே இந்நோயின் தாக்கத்துக்குள்ளானவர்களாவர்.

இவர்களுக்கான பூர்வாங்க பரிசோதனைகள் யாவும் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வாந்திபேதி நோய் மீண்டும் யாழ்.குடாநாட்டில் பரவ ஆரம்பித்துள்ளது. இதுவரை இந்நோயினால் பீடிக்கப்பட்ட சிறுபிள்ளைகள் உட்பட சுமார் 30 பேர் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தனர். இவர்களில் ஒருவர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (ஓ-15)

### நாளை

கார்த்திகை 17
செவ்வாய்க்கிழமை
(03.12.2002)
திதி : சதுர்த்தசி
பிற்பகல் 3.44 வரை.
நட்சத்திரம்: விசாகம்
பிற்பகல் 12.58 வரை.
கரிநாள்
சுபநேரம் : 10.45 - 12.15
ராகுகாலம் : 3.15 - 4.45
(பழைய நேரப்படி)

### உதய வாக்கு

தேவை இல்லாத போது வாயை மூடிக்கொள்ளுங்கள் சரியான சந்தர்ப்பம் வந்தால் சொல்லுங்கள். சொல்லுவதை தீப்பொறி எழச்சொல்லுங்கள்.

## அதிபர், ஆசிரியர், மாணவன் என்று தலா ஒருவருடன் ஒருபாடசாலை

வலிகாமம் தெற்கு,டிசெ.2

ஓர் அதிபர், ஓர் ஆசிரியர், ஒரு மாணவன் ஆகியோருடன் ஒருபாடசாலை இயங்கிவருகிறது.

மக்கள் அதிகம் மீளக் குடியமராத அல்லது இராணுவ முகாம்களுக்கு அண்மித்ததாகவுள்ள பகுதியில் இந்தப் பாடசாலை இருக்கவில்லை. மக்கள் மிக நெருக்கமாக வாழும் பகுதியான வலிகாமத்திலேயே இப்பாடசாலை இயங்கிவருகிறது.

உடுவில் கல்விக்கோட்டத்தைச் சேர்ந்த உடுவில் தேவாலி ரேசரி பாடசாலையே இவ்வாறு ஓர் அதிபரையும், ஓர் ஆசிரியரையும், ஒருமாணவனையும் கொண்டு செயற்பட்டுவருகிறது. (ஓ-152)

### நவாலி, கொத்துகலட்டியில்

## 5 ஆயிரம் பனம் விதைகள் நடுகை செய்யப்பட்டன

வலிகாமம் தெற்கு,டிசெ.2

பனை நடுகைத் திட்டத்தின் கீழ் வலிகாமம் பனை - தென்னை அபிவிருத்திச் சங்கத்தினரால் நவாலி கிராமத்தில் 5 ஆயிரம் பனம் விதைகள் அண்மையில் நடுகை செய்யப்பட்டுள்ளன.

நவாலியில் உள்ள கொத்துகலட்டி வீதியில் அமைந்திருக்கும் அரச காணிகளில் இந்த பனம் விதைகள் நடப்பட்டன.

யாழ்ப்பாண மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் ஆ.கணேசமூர்த்தி இதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பனம் விதைகள் நடும் திட்டத்தை ஆரம்பித்து வைத்தார்.

வலிகாமம் பனை - தென்னை வள அபிவிருத்தி சங்கக் கொத்தணித் தலைவர் க.மெய்யழகன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் சங்கத் தலைவர்கள், அங்கத்தவர்கள், பணியாளர்கள், நவாலி கிராம சேவையாளர் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டு பனம்விதைகளை நட்டுவைத்தனர். (எ-152)

### செயலமர்வில் கலந்துகொண்ட

## வரவுச் சான்றிதழ் இன்றி விடுமுறை பெறுவதில் சிரமம்

### ஆசிரியர்கள் விசனம்

யாழ்ப்பாணம்,டிசெ.2

கலந்துரையாடல் மற்றும் கருத்தரங்குகளில் கலந்துகொள்ளும் பாடசாலை ஆசிரியர்கள் அந்த நாள்களுக்குரிய கடமை விடுமுறையைப் பெறுவதில் பல சிரமங்களை அனுபவிப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் நடந்த வருட இறுதிக் கருத்தரங்குகளில் கலந்து கொண்ட ஆசிரியர்கள் குறிப்பாக ஆரம்பக் கல்விக் கருத்தரங்குகளில் கலந்துகொண்ட ஆசிரியர்கள் பலரும் தமக்கு வரவுச் சான்றிதழ் வழங்கப்படவில்லை என்று விசனம் தெரிவித்துள்ளனர்.

வரவுச் சான்றிதழ்களைப் பெற்று கல்வி அதிகாரியிடமிருந்து கடமை விடுமுறைக்கான அனுமதிக் கடிதத்தை பெற்ற பின்பே பாடசாலை அதிபர்கள் கடமை விடுமுறை வழங்கமுடியும்.

வரவுச் சான்றிதழ் இல்லாது கடமை விடுமுறைக்கு எந்த ஒரு ஆசிரியரும் விண்ணப்பிக்கமுடியாது .

வரவுச் சான்றிதழ் இன்றி பாடசாலைக்கு திரும்பும் ஆசிரியர்கள் அதிபரிடம் கடமை விடுமுறைக்கான விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதில் தயக்கம் ஏற்படுகிறது.

இது பாடசாலை நிர்வாகத்தில் முரண்பாடுகளை தோற்றுவிப்பதாகக் கூறப்படுகிறது. (ஓ-88)

## கலண்டர்கள், டயரிகள் விற்பனைக்கு

கொழும்பு விலையில்! யாழ்.நகரில்!

மெய்கண்டான் கலண்டர்கள், சீவம் கலண்டர்கள் பல வகைகளிலும் மற்றும் டயறிகள் பல அளவுகளிலும் எங்கும் கிடைக்காத நியாய விலையில் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஸ்தாபனம்:

**சிங்கம் வர்த்தக நிலையம்**
290, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

**பேப்பர் கவுஸ்**
300, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(11255)


## 47ஆம் நாள் நினைவலைகள்

தாயின் மடியில் 18 - 09 - 1945



மண்ணின் மடியில் 17 - 10 - 2002

### அமரர் நாகலிங்கம் விஜயரட்ணம்

(கார்கார விஜயம்)

எங்கள் குடும்பத்தின் குலவிளக்கே!
குவலயம் போற்ற குன்றாத புகழுடன் நீ வாழ்ந்தாய்!
நாமெல்லாம் வாடி நிற்க நீ எங்கய்யா சென்றாய்?
நாற்பத்தேழு நாள்கள் சென்றதுவோ - இன்று
எமைவிட்டுப் பிரிந்து!
ஓம்சாந்தி! ஓம்சாந்தி! ஓம்சாந்தி!

இன்று (02-12-2002) திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*கேமா ஸ்ரோர்ஸ் முன்லேன்,*
*பண்ணாகம், சுழிபுரம்.* (11074)

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## நல்லூர் பிரதேச நல்லிணக்கக் குழுகூட்டம்

நல்லூர் பிரதேச செயலர் பிரிவின் பிரதேச புனர்வாழ்வு நல்லிணக்கக் குழுவின் கூட்டம் எதிர்வரும் 5ஆம் திகதி வியாழன் காலை 10மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.(எ-180)

## வயோதிபரின் பணப்பை அபகரிப்பு

வீதியில் நடந்து சென்ற வயோதிபர் ஒருவரை வழிமறித்த திருடர்கள் அவர் வைத்திருந்த பணப்பையினை அபகரித்துச் சென்றுள்ளனர்.


காரைநகர் சுப்பிரமணியம் வீதியில் கடந்த வியாழனன்று இரவு 7.00மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வயோதிபரான பொ.கந்தையா என்பவரே இவ்வாறு தனது பணப்பையை இழந்துள்ளார்.

மேற்படி பணப்பையில் ஒருதொகைப் பணம், தங்கமோதிரம் ஒன்றும், அடையாள அட்டைகள் என்பன இருந்ததாக அதனைப் பறிகொடுத்த வயோதிபர் தெரிவித்தார். (எ-73)

## 18 ஆவது ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 09 - 04 - 1959



அழிப்பு 02 - 12 - 1984

மன்னார் தொலைத்தொடர்பு நிலையத்தில் கடமையாற்றி மறைந்த எங்கள் அன்புச் செல்வன்

### அமரர் கந்தையா லக்ஷ்மிகாந்தன்

ஆஸ்பத்திரி வீதி,
மன்னார். (சி-25176)

-குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



### திருமதி பரமேஸ்வரி கந்தசாமி

தோற்றம் 1953-03-25 மறைவு 2002-11-02

*சாய்ந்தாடிச் சாய்ந்தாடி நாம் வாற நேரம்*
*பாய்ந்தோடி எமைத் தாங்கும் குலமகளே; நீ எங்கே?*
*தாங்கள் இயற்கை எய்தி ஒரு மாதம் கழிந்து விட்டாலும்*
*எம் நெஞ்சங்களில் என்றும் நிலைத்து நிற்பாய்*
*எம் குலவிளக்கே!*

தங்கள் ஆத்மா சாந்தியுறும் வண்ணம்
எல்லாம் வல்ல மாதகல் நுணசை முருகன்
திருவடிகளை இறைஞ்சுகின்றோம்.

லயன் S.சிவபாலசுப்பிரமணியம்
மாதகல் வடக்கு,
மாதகல். (11240)

- குடும்பத்தினர்.





எமது 3ஆவது கணனிமயப்படுத்திய யாழ்ப்பாண, ஸ்டான்லி வீதிக் கிளை, இன்று இலங்கை வங்கியின் 'யுனி பாங்கிங்' தொடரமைப்புடன் இணைகின்றது. வாடிக்கையாளருக்கு சிறந்த பல சேவைகளை வழங்கும் இக்கிளை புதிய தொடரமைப்பினால் 'மையப்படுத்திய வங்கிச் சேவைகளை' புதிய நுட்பங்களுடன் வழங்க உள்ளது.

இலங்கை வங்கி
தேசத்தின் வங்கியாளர்

# இலங்கைத் தமிழரின் தொன்மையை விரிவாகக் கூறும் சங்க இலக்கியங்கள்

## விஜயன் வருகைக்கு முன்னரே தமிழர் ஆட்சி இங்கு இருந்தது

தமிழர்களின் பிறப்பிடம் வாழ்வின் நிலைக்களம் விரிவான எல்லையைக் கொண்டிருந்தது. வடக்கில் தக்கணம் முதல் தெற்கில் இந்து மாக்கடல் வரையான பகுதிக்குள்ளும் கிழக்கில் சாந்ததீவு வரையிலும் மேறகில் மடகாஸ்கர் வரையிலும் பரவி குமரிக் கண்டமொன்று விளங்கி நினறது. ஈழம் நாவல் மரங்கள் நிரம்பிய நிலப்பரப்பாதலின் நாவலந்தீவு என விஷ்ணு புராணத்தில் விளக்கினர்.

கி.மு.1885 ஹரப்பாவில் சிந்து வெளி நாகரிகம் வன்முறை முடிவில் நொறுங்கியது. மக்களின் எலும்புக் கூடுகள் பல தாமிரபரணியில் (இலங்கையின் மறுபெயர்) கிடைத்ததாக தொல பொருளியியலாளர்கள் கூறுகின்றனர். மேலநாட்டு நில நூலார் நாலந தீவு மணிபல்லவத் துறைமுகத்தை "தேதிசு'' என்றனர். இன்றைய தக்கணத்தின் வடபகுதி தேதிசு கடலின் தெற்கு அலை வாய்க்கரையாக விளங்கியது. நாவலந்தீவின் நடுவில் மேருமலை (சிவனொளிபாதமும்) தெற்கில் இமயவன் கோடையுமான (கதிர்காமத்தின்) கதிரைமலைக்கு அருகில் உள்ளது.

### பாரதத்தின் ஒரு பகுதி

அன்றைய. மாபெரும் நிலப்பரப்பாகிய நாவலந்தீவு (மணிபல்லவம்) இந்திய துணைக்கண்டத்தைவிட 190 மடங்கு பெரியதாக விளங்கியதாக பிற்காலத்தில் தோன்றிய நாக குமார காவியம் ஒரு கணிப்பைக் கூறியுள்ளது. பண்டைக்கால தமிழ் இலக்கியம் பெரு வெள்ளச் சேதத்தின்போது தமிழ் மன்னன் மனு பிழைத்ததால் இக்குமரிமுனைக் கடல் கோள் ஏற்பட்டதாகவும் பாகவத புராணம் விளக்குகின்றது. இந்த பாரதத்தின் ஒரு பகுதியாக இன்று ஈழம் வேறுபட்டுக் கிடக்கிறது கி.மு. 2378இல் நிகழ்ந்த கடல்கோளால் இலங்கை வேறுபட்டு தீவு ஆகியது.

ஈழத்து பழந்தமிழ்க் குடிகளின் வரலாற்றின் விளைவாக இலங்கை கருதப்பட்டது. தாமிரபரணிப் படுக்கைகளின் தெற்கில் தேரிகள் (மணல் திட்டுகள்) நிறைந்த மணல்மேடுகளும், மணல்திட்டுகளும் உள்ளன. இவை தற்போது அகதிகளாகத் திரும்பி வருவோரை பரிதவிக்கவிட்டு விட்டுச் செல்லும் இடமாகும்.

கடல் துறைமுகங்களின் அருகில் ஈழம் பெற்றதனால் மலைகளும் மலைக்காடுகளும் ஈன்ற சந்தனம், ஏலம், கராம்பு, மயில்தோகை, யானைத் தந்தம், கடலிலுள்ள முத்துகளும் தொல்பழங்காலத்திலேயே மேற்காசியர்களையும் யாவர்கள், சீனர்கள், ஐரோப்பியர்களையும் கவர்ந்தது. மேல்நாட்டாரும், கிழக்கு நாட்டாரும் கடல் வழியாக இடைவிடாத தொடர்புக் கவர்ச்சியான வாணிபம் வளர வழிவகுத்தது.

பண்டைய கால தமிழரின் தொன்மையை பறைசாற்றுவதாக தமிழ் இலக்கியத்தில் சங்க இலக்கியம் பண்டைக்காலத் தமிழர்களின் வாழ்வின் முழு உருவப்படத்தைக் காட்டுகிறது. அவர்களின் வாழ்வை எல்லாக் கோணங்களிலும் கண்டறியும் அரிய வாய்ப்பை பழந்தமிழ் இலக்கிய நூல்கள் செப்புகின்றன. புறநானூறு, நற்றினை, பதிற்றுப்பத்து, மதுரைக்காஞ்சி, பட்டினப் பாலை, ஆற்றுப் படைகள் முதலியவையும் சிலப்பதிகாரம், மணிமேகலையும் காபபிய கால வரலாற்றுக்குப் போதிய சான்றாகும்.

சக்தி சிவன் வழிபாடும் கிராம தேவதைகளை வழிபடும் வழக்கும் இவர்கள் வழியே தோன்றியவையாகும்.

தக்கணத்துடன் இணைந்த நிலமாகக் கிடந்த இந்து மாக்கடலில் மூழ்கி இருக்கும் குமரிக்கண்டமே மனிதனின் பிறப்பிடம் என்பர் விஞ்ஞான நோக்குடன் ஆராய்வோர். சமய நோக்குடன் ஆய்வு செய்வோர் மேற்காசியாவின் மேற்பகுதி மனிதனின் பிறப்பிடம் என்பர்.

இராமாயணம் இயக்கர் குல அரசன் இராவணனுக்கும், ஆரியகுல இராமனுக்கும் இடையில் ஏற்பட்ட யுத்தம் என்று ஆரியர் சார்பு முறையில் எழுதப்பட்டுள்ளது. இதனால் ஆரியர் அல்லாதோரை அரக்கர் எனவும், குரங்குகள் எனவும் இகழ்ந்து உரைக்கின்றனர். சிவபக்தனான இராவணனின் சிறப்புத் தன்மையும், கூர்ந்த அறிவையுமே பத்துத் தலைகள் என்பது குறித்து நிற்கின்றது. இலங்கைத் தமிழரின் தொன்மையைக் கட்டியம் கூறும் இராவணன் பெரு வேந்தன், பத்துப் பிரதேசங்களை அரசாண்டான்.

### தமிழரின் ஆட்சியில்...

இரண்டாம் நூற்றாண்டுவரை இலங்கையின் வடபகுதி தமிழரின் ஆட்சியில் இருந்தது. முருகப் பெருமானின் அருளாட்சி வடபுலமான செல்வச்சந்நிதியில் தொடங்கி தெற்கே கதிர்காமம்வரை இருந்தது.

விஜயனின் இலங்கை வருகைக்கு முன்பு முழு இலங்கையிலும் தமிழர் ஆட்சியும் சைவ சமயமுமே இருந்தது என்பதை "ரோமுக்கும் இந்தியாவுக்கும் இடைப்பட்ட வாணிபம்" எனும் ஆங்கில நூல் குறிப்பிடுகிறது.

கிறிஸ்துவுக்கு முன் 2500 ஆண்டுகளுக்கு முன் எட்டு சிவாலயங்கள் (ஈஸ்வரங்கள்) இருந்தன எனக் கூறியுள்ளனர். ஆனால், வரலாற்று ஆசிரியர் கலாநிதி பீரிஸ் ஐந்து சிவாலயம் எனக் குறிப்பிட்டபோதும், ஒரு மனிதனின் உடம்புடன் ஒப்பிடப்பட்டதாக எட்டு ஆலயங்களும் அமைந்துள்ளன என்று தெரிவித்தார்.

1. வட இலங்கைத்தீவின் வடக்கே வாய்ப்பகுதியில் அமைந்துள்ளது சம்புநாகேஸ்வரம். இது சோழ புரமான சுழிபுரம் என திரிபு அடைந்த ஜம்புகோளப் பட்டணத்தில் உள்ளது.

2. மனிதனின் நெஞ்சுப் பகுதி போன்று இலங்கையின் நெஞ்சுப் பகுதியான மன்னார் மாந்தோட்டத்தில் அமைந்துள்ளது திருக்கேதீஸ்வரம்.

3. இலங்கையின் தொப்புள் பகுதியில் சிலாபத்தில் அமைந்துள்ளது முன்னேஸ்வரம். இங்கேதான் இராவணன் சீதையை இலங்கைக்குக் கடத்தி வந்ததும், பின்பு இராமன் புஸ்பக விமானத்தில் புறப்படுமுன் பிரமகத்தி தோசம் பீடிக்கப்பட்டு முன்னேஸ்வரம் ஆலயத்தில் வணங்கினான் என்பது வரலாறு.

4. கொழும்பின் மூலாதாரத்தில் அமைந்துள்ளது பொன்னம்பலவாணேஸ்வரம்.

5. இலங்கையின் திருப்பாதமாக காலியில் அமைந்துள்ளது சந்திரேஸ்வரம்.

6. இலங்கையின் பின் நாரிப் பகுதியில் மட்டக்களப்பு கொக்கட்டிச் சோலையில் அமைந்துள்ளது தான்தோன்றீஸ்வரம்.

7. இலங்கையின் முதுகுப்பகுதியில் திருகோணமலையில் அமைந்துள்ளது திருக்கோணேஸ்வரம் இக் கோயில் அருகே இராவணன் வெட்டுள்ளது.

8. இலங்கையின் மூளைப்பகுதியில் கீரிமலை நகுலேஸ்வரம் உள்ளது. இதன் அருகே குதிரைமுகம் மாறிய புண்ணிய தீர்த்தத்தலம் கீரிமலைத் தீர்த்தம் உள்ளது.

### கடல்கோள் நிகழ்வுகள்

பழந்தமிழர் நூல்களான புறநானூறு, கலித்தொகை, இறையனார் களவியலுரை, சிலப்பதிகாரம் முதலியன கடல்கோள் நிகழ்வுகள் நடைபெற்றதற்கு சான்று பகர்கின்றன.

இதனையே கடைச்சங்கப் புலவரான ஈழத்துப் பூதத்தேவனார் மூன்றாம் கடற்கோளுக்கு முன் ஈழம் தனித்தீவாகக் கடல் நீரால் பிரிக்கப்பட்ட பின் ஈழத்திலிருந்து பல புலவர்கள் வடமதுரைக்குச் சென்று சங்கமிருந்தனர். ஈழவள நாடு தனி நிலப்பரப்பாகக் கடல் நீரால் பிரிக்கப்படுவதற்கு முன்னரே குமரிக்கண்டம் பெரு நிலப்பரப்பில் தமிழுக்கு நடுகளமாக விளங்கி வந்ததை "செங்கோன் தரைச் செலவு" அரண் செய்வதாகவுள்ளது.

செங்கோன் தரைச் செலவு என்பது மிகப் பழங்கால இலக்கியமாகும். இந்நூல் செங்கோன் மன்னன், நாடுகள் மீது படையெடுத்துச் சென்றபோது ஏற்பட்ட செலவையே குறிக்கின்றது.

குமரிக் கண்டத்துத் தமிழ் அழிந்து, சிதைந்துபோகும் முன்னர் இன்றைய இலங்கையின் நிலப்பரப்பும் அக் கண்டத்தில் உள்ளடக்கப்பட்டிருத்தல் வேண்டும். ஆகவே, தமிழ் வளர்ந்ததாகக் கருதப்படும் குமரிக்கண்டத்தில் இருந்தபோதும் பிரிவுற்ற பின்னரும் கூட இலங்கையில் தமிழ் மொழி பேசப்பட்டுள்ளது என அறிய முடிகிறது.

இலங்கையின் பழமை வரலாற்றை ஆய்ந்த ஆய்வாளர்கள் பலாங்கொடையில் கண்டெடுக்கப்பட்ட மனித எலும்புக் கூடு கி.மு.1500 ஆண்டுகளுக்கு முன்னையது எனவும் இது மூளை விருத்தியடைந்த மனித இனத்திற்குரியது எனவும் வரையறையிட்டுள்ளனர்.

### செழிப்புற வாழ்ந்தனர்

இறையனாரின் "களவியலுரை'' எனும் பழந்தமிழ் நூல் கி.மு.1000 ஆண்டளவில் இப்பிரதேசத்தில் தமிழ் சங்கம் அமைத்து ஆட்சி புரிந்தமையையும், அக்காலத்திற்கு முன்னரேயே தமிழர் நன்கு செழிப்புற வாழ்ந்தமை பற்றியும் குறிப்பிட்டுள்ளது. இந்நூல் கூறும் கால நிர்ணயம் எவ்வாறு இருப்பினும் பலாங்கொடை மனித இனத்திற்கும், இங்கு வாழ்ந்த குமரிக் கண்டத்து தமிழர்களின் மூதாதையருக்கும் தொடர்பு இருந்ததை அறியமுடிகிறது.

கடல் வாய்ப்பட்ட குமரிக்கண்டத்தில தென்னை, பனை வளம் நிறைந்த நிலப்பகுதிகளே தெங்கநாடு, பனை நாடு என வழங்கப்பட்டன. இலங்கைத் தீவினது கடல்வாய்ப்பட்ட குமரிக் கண்டத்தின் பகுதியாதலாலும் தீவின் வடபகுதி பனை வளம் மிக்கதாக விளங்குவதாலும், வடமேற்குப் பகுதி தென்னை வளம் மிக்கதாக விளங்குவதாலும் இத்தீவின் நிலப்பரப்பு கடற்கோளுக்கு முன் தெங்க நாடு, பனைநாடு ஆகிய இரு நாடுகளையும் சார்ந்ததாகவே இருந்திருக்க வேண்டும்.

இந்து நதிப்பள்ளத்தாக்கில் 8000 வருடங்களுக்கு முன்னர் நாகரிகச் செழிப்புடன் வாழ்ந்த திராவிடர்கள் சிவசக்தி வழிபாட்டு முறையையே கொண்டிருந்தார்கள். அவர்களின் வழித்தோன்றல்களே இலங்கையின் பூர்வீகக் குடிகளாக இருந்துள்ளனர் என்பதற்கு பலதரப்பட்ட ஆதாரங்கள் உள்ளன. திராவிடர்களே ஆலயங்கள் அமைத்து வழிபடும் வழக்கத்தை உடையவர்களாக இருந்துள்ளனர்.

பேராசிரியர் பொன்.சக்திவேல்

சங்க கால வரலாற்றில் முதல் சங்கம் கடல்கோள் ஏற்பட்ட தென் மதுரையிலிருந்து சிவபெருமான், குமரவேள், அகத்தியர் உள்ளிட்ட 4,449 புலவர்கள் தொடர்புகொண்டிருந்தனர்.

தென்மதுரை கடல் கோளுக்கு இரையாகவே இடைச்சங்கம் பாண்டியர் தலைநகரம் கபாட புரத்திற்கு மாற்றப்பட்டது. 3,700 ஆண்டுகள் வாழ்வு பெற்ற இடைச்சங்கத்தில் 3,700 புலவர்கள் பங்கேற்றுள்ளனர்.

### மதுரைக்கு மாற்றம்

கபாடபுரம் கடல்கோளுக்கு இரையானதும் பாண்டியர் தலைநகரமும் சங்கமும் மதுரைக்கு மாற்றப்பட்டன. இதுவே கடைச்சங்கமாகும். இது கி.மு.1850 ஆண்டுகள் கி.மு.449 புலவர்களின் அரவணைப்புடன் செயற்பட்டது.

மூன்று சங்கங்களும் 9,990 ஆண்டுகளின் கால அளவினைக் கொண்டிருப்பது மேற்கு நாடுகளின் வரலாற்று ஆய்வாளர்களுக்கு வியப்பூட்டுவதாகவும் உள்ளது.

சேரன் செங்குட்டுவன், இலங்கை வேந்தன் முதலாம் கஜபாகு ஆகியவர்களின் தொடாபை அடிப்படையாக வைத்து கி.பி.முதல் மூன்று நூற்றாண்டுகளே சங்ககாலம் என்றனர். அண்மையில் (கொற்கையிலும், இலங்கையிலும்) கிடைத்த பானை ஓட்டுத் துண்டுகளும், முத்திரையும், பாண்டுகஸ்நுவரை, மாத்தளை, கந்தப்பளை முதலிய தென் இலங்கைப் பகுதி கல்வெட்டுக்களும் வளவை கங்கை, கதிரவெளி, வல்லிபுரம், வவுனியா, அநுராதபுரம் ஆகிய இடங்களில் கண்டெடுக்கப்பட்ட முதுமகளிர் தாழிகள் ஆகியன தமிழர் பண்பாட்டுக்கும் தொன்மைக்கும் சான்று பகர்கின்றன.

☆

# அமைதிக்கு அத்திபாரம் தேசிய அரசே

புரிந்துணர்வு உடன்படிக்கையில் பிளவுபட்ட இரு தலைவர்கள் கைச்சாத்திட்டதன் பின்பு மூடிய பாதை திறக்கப்பட்டது - தடைகள் பெரும்பாலானவை நீக்கப்பட்டுள்ளன - சில தடங்கல்கள் இருக்கத்தான் செய்கின்றன -

சோதனைக் கெடுபிடிகள் நீக்கப்பட்டுள்ளன. ஒருவிதத்தில் தெற்குக்கும் வடக்கு - கிழக்கும் ஒன்றுபட்டு ஐக்கிய இலங்கையைக் கட்டியெழுப்ப அத்திபாரம் இடப்பட்டுள்ளது. இந்த மகிழ்வுக் கோட்டை நிரந்தர சொர்க்க பூமியாக தலைநிமிர வேண்டுமானால் - கடந்த காலங்களைப்போல உடன்படிக்கைகள் கிழித்தெறியப்பட்டு யுத்தம் மூளாது இருக்க வேண்டுமானால் - நாட்டையும் மக்களையும் நாசப்படுத்தாத நிலைமை உருவாகவேண்டுமேயானால் - தேசிய பிரச்சினைகளை தீர்க்க வேண்டுமேயானால் - தேசிய நலனில் அக்கறை கொண்ட சகல கட்சிகளையும் உள்ளடக்கிய 'தேசிய அரசு' ஒன்று உருவாகவேண்டும் - உருவாக்கப்பட வேண்டிய தேவையும் சந்தர்ப்ப சூழலும் ஏற்பட்டுள்ளதை சகலரும் சிந்திக்க வேண்டும். இதன் மூலம் சுயநல தீய சக்திகளை ஒழிக்க வாய்ப்பு ஏற்படும்.

இலங்கையின் அரசியல் ஆதிக்கத்தை சற்று பின்னோக்கிப் பார்ப்போமேயானால் இதன் தேவை தெளிவாகவே புரியும்.

1945இல் பிரதமர் எஸ்.சேனநாயக்கா இலங்கைக்கு பிரிட்டிஷ் அரசு, டொமினியன் அந்தஸ்து வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்தார். 1915இல் இங்கை மக்களுக்கு குறிப்பாக சிங்கள மக்களுக்கு எதிராக பிரிட்டிஷ் அரசமேற்கொண்ட கொடுமைகளுக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கியவர் சேர் பொன்.இராமநாதன் ஆவார். எம் மக்களுக்கு "நீதி தேவை" என முழங்கியவர். உலக மகா யுத்த காலப் பகுதியில் தமது உயிரையும் மதியாது நீராவிப் படகில் கண்ணிவெடி புதைக்கப்பட்ட கடலினூடாகச் சென்று பிரிட்டிஷ் அரசுடன் அவர் வாதிட்டார். மூவின மக்களும் அயராது இரத்தம் சிந்திப் போராடியதன் பலனாக 1946இல் மே மாதம் 15ஆம் திகதி டொமினியன் அந்தஸ்து அங்கீகாரம் கிடைத்து பர்மாவுக்கும், இந்தியாவுக்கும் சுதந்திரம் கிடைத்த பின்னர் மூவின மக்களின் தொடர் நடவடிக்கையால் 1948 பெப்ரவரி 4ஆம் திகதி இலங்கைத் தீவு சுதந்திர நாடாகியது.

ஆனால் கிடைத்த சுதந்திரக் காற்றை சகரும் அனுபவிக்கவிடாது தீய இனவாத சக்திகளால் நச்சுவிதைகள் விதைக்கப்பட்டன. அப்பொழுதே திட்டமிட்ட இன அழிப்புக் கைங்கரியமாக செய்நன்றியையும் மறந்து கல்லோயா திட்டம் தோற்றுவிக்கப்பட்டதை எவரும் மறக்கமுடியாது.

(கல்லோயா பகுதியில் கரும்புத் தோட்டங்களை உருவாக்கி சீனித் தொழிற்சாலையைக் கட்டி அங்கு சிங்கள மக்களைக் குடியேற்ற மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையே கல்லோயாத் திட்டமாகும்.)

அரசியல் மோகத்தால் உந்தப்பட்ட சிங்களத் தலைவர்கள் சுயலாபத்துக்காக - அரசைக் கைப்பற்றும் பேராசையால் - சில குறுக்கு வழிகளைக் கையாண்டனர். இனவாதம் - மதவாதம் என்ற நச்சுவிதைகள் மக்கள் மத்தியில் தூவப்பட்டன. அதன் விளைவாக 1956ஆம் ஆண்டு எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கவால் கொண்டுவரப்பட்டதே "சிங்களம் மட்டும்" சட்டம். கொதித்தெழுந்த தமிழர் படை சாத்வீக சத்தியாக்கிரகம், சட்ட மறுப்பு, அஹிம்சைப் போராட்டம் என முன்னெடுத்த வரலாறும் அதனால் விளைந்த சோகங்களும் கொடுமைகளும் உலகமே அறியும்.




க.ஆனந்தக்குமாரசாமி
கரவெட்டி

பின்னர் 1972இல் பண்டாரநாயக்காவின் பாரியார் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவால் "குடியரசு" பிரகடனப்படுத்தப்பட்டது. இத்தினத்தை தமிழருக்கு மரணசாசனம் எழுதப்பட்ட நாளாகப் பலர் கருதினார்கள். இந்தப் பிரகடனத்தின் மூலம் பேரினவாதத்தின் அபிலாஷைகளைச் செயற்படுத்துவதற்கான அடிப்படைகள் உருவாகின. அதற்கேற்ற வகையில் சட்டத்துறை, நிர்வாகத்துறை, நீதித்துறை போன்றவை உருவாக்கப்பட்டன. 'மீண்டும் வலுப்படுத்தல்' என்ற வகையில் 1978ஆம் ஆண்டு குடியரசு யாப்பு திருத்தப்பட்டது. இதன்மூலம் தமிழ் மக்களுக்கான அதிகாரத்தினைப் பங்கிடக்கூடிய வகையிலான கூட்டாட்சி அரசு அமைதல் தடுக்கப்பட்டது. இறைமை என்ற போர்வையில் ஆட்சி செய்யும் அதிகாரம் பெரும்பான்மை மக்களாகிய சிங்கள மக்களிடம் சேர்க்க வழியேற்பட்டது. யாப்பின் 76ஆம் பிரிவில் இதனை வலுப்படுத்தும் வகையில் - சட்டஆக்க அதிகாரத்தில் தமிழ்மக்கள் பங்கீட்டினைப் பெற்றுக்கொள்வதைத் தடுக்க வழி சமைக்கப்பட்டது. கூட்டாட்சி என்ற வகையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு வரும்போது சட்ட ஆக்க அதிகாரம் தமிழ்மக்களுக்கு இல்லாமற் செய்யப்பட்டது.

1789இல் பிரான்ஸ் நாட்டில் பிரகடனப்படுத்தப்பட்ட "மனித உரிமைகள் சாசனத்தில்'' மனிதன் பிறந்ததில் இருந்து இறக்கும் வரை சகல உரிமைகளையும் அனுபவிக்க சம உரிமையுடையவன் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகவே குடியரசு வெற்றியளிக்கவேண்டுமேயானால் இன, மத வேறுபாடுகள் காணப்படாத வகையில் உரிமைகள் வழங்கப்படவேண்டும்; பரவலாக்கப்படவேண்டும். அதற்கேற்ப சட்ட திருத்தங்கள் செய்யப்பட தேசிய அரசே ஏற்றதாக அமையும். மக்களால் தெரிவுசெய்யப்பட்ட அரசும், குறைகண்ட மக்களால் ஒதுக்கப்பட்ட எதிர்க் கட்சியும் ஒன்றிணைந்து மக்கள் குறைதீர்க்க முன்வர வேண்டும்.

இலங்கையில் சுயநல நோக்கினாலும், ஆணவ ஆதிக்கத்தாலும் அரசியற் திட்ட வழிமுறைகளோடு போராடக்கூடிய சகல வழிகளும் இவ்வரசியற் திட்டத்துடன் அடைக்கப்பட்டன. அதன் பிரதிபலிப்பே அவ் வப்போது ஏவிவிடப்பட்ட அரச பயங்கரவாதமாகும். அதனால் கொல்லப்பட்ட தமிழர்கள், அழிக்கப்பட்ட அவர்களது உடைமைகள், மானபங்கப்படுத்தப்பட்ட பெண்கள் என கறைபடிந்த வரலாறு என்றும் அகலாது தமிழர் மனங்களில் நின்றன. மறக்கவோ - மறைக்கவோ முடியாத அரச பயங்கரவாதமே தன்மானம் உள்ள ஒவ்வொரு தமிழ் உள்ளங்களையும் நெருட வைத்தது. அதன் வரலாறுதான் தமிழர்களை ஆயுதம் ஏந்த நிர்ப்பந்தித்தது. பயங்கரவாத ஒழிப்புப் போா என்று கூறி ஆயிரம் ஆயிரம்அப்பாவி உயிர்களைக் காவு கொண்டதன் பின் நாட்டை வனாந்தரமாக்கிய பின்- எண்ணற்றவர்களை முடமாக்கிய பின் இலங்கை அரசுக்கு ஞானோதயம் ஏற்பட்டுள்ளதை வரவேற்கலாம். அதேவேளை இன்னும் நாம் செய்யவேண்டிய சமாதானப் பாதை நீண்டு கிடக்கிறது.

இந்த நிலையில் புதுயுகம் படைக்க சகல அரசியல் தரப்பினரும் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையுடன் நாட்டுக்காகவும், மக்களின் நிம்மதி வாழ்வுக்காகவும் செயற்படவேண்டும்.

(9ஆம் பக்கம் பார்க்க)

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

மின்சார இயந்திரங்கள் (தச்சு வேலை மெசின்-10",12",14", வெல்டிங் டிரான்ஸ் போமர், அலுமினிய கட்டிங் மெசின், ரிவ்ஸ்கள், ஜெனரேற்றர்) விற்பனைக்குண்டு. தொடர்பு: K.சுதாகரன், இல.20, 2ஆம் ஒழுங்கை, அரசடி வீதி, யாழ்ப்பாணம். (11216)

நல்ல நிலையிலுள்ள 50சிறி தொடர் இலக்கமுடைய L.3 Hundred Van, (டீசல்) 4 சிறி ஒஸ்ரீன் கேம்பிறிஜ் கார் (பரினா) என்பன சகல ஆவணங்களுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: றாஜீவ், ஆனைக்கோட்டைச சந்தி. T.P.: 3529, 2867. (11178)

புத்தூர் சிவன்கோயிலுக்கு அண்மையில் வீட்டுடன் வளவும், கோவிலின் பின்புறமாக வெறுங்காணி (கலட்டி) விற்பனைக்குண்டு. தொடர்பு: செல்லத்துரை, T.P. 0777-734366 அச்சுவேலி. (11243)

### வீடு விற்பனைக்கு

மானிப்பாய் மத்திய சந்தைக்கு முன் ஒழுங்கையில் 3 1/4 பரப்புக் காணி, வீடு, கிணற்றுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: ஆ.சிவராஜா, சுழாவடி தபால் கந்தோருக்கு அருகில், 04ஆம் கட்டை, ஆனைக்கோட்டை. (11208)

### ஆங்கிலம்

ஆண்டு 6 முதல் பல்கலைக்கழக மாணவருக்கான விசேட ஆங்கில வகுப்புகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. தனிப்பட்ட கவனம் எடுக்கப்படும். ஆரம்பம் 05-12-2002 தொடர்பு: புது இலக்கம் 33, பலாலி வீதி, இலுப்பையடிச் சந்தி (தெற்கு), யாழ்ப்பாணம். (11226)

### தவறிவிட்டது

டச்சு றோட், அளவெட்டியைச் சேர்ந்த சுகந்தினி சீனிவாசகம் என்பவரின் தேசிய அடையாள அட்டை (இல.766543448V) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேலுள்ள முகவரியில் ஒப்படைத்துதவவும். (11231)

### திருமண சேவை

1959, மூலம், செவ்வாய் 12, பட்டதாரி ஆசிரியைக்கு ஏற்ற மணமகன் (அரச சுயதொழில் புரிபவர்) தேவை. பொறுப்பற்ற, தாரமிழந்தவரும் தொடர்புகொள்ளலாம். தொடர்பு: துரைவிமலா, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். (11169)

1974, பாவம் குறைந்த, M.Sc. விரிவுரையாளருக்கும் 1972, M.Sc. U.K. எஞ்சினியருக்கும் பட்டதாரி மணமக்கள் தேவை. வெளிநாட்டு பிரஜாவுரிமைபெற்ற மணமக்கள், பட்டதாரிகள், வர்த்தகர், கிளாக் மணமக்களும் எம்மிடம் உள்ளனர். தொடர்பு: இல.298, கோயில் வீதி, நல்லூர் (கம்பன் கோட்டத்துக்கு அருகில்). (11233)

### வாடகைக்கு

யாழ்ப்பாணம் கே.கே.எஸ். வீதி, முட்டாசுக்கடைச் சந்திக்கும் சத்திரத்துச் சந்திக்கும் இடையில் 12'x25' அளவுள்ள கடை வாடகைக்குண்டு. தொடர்பு: விளம்பர இல.1710, C/o உதயன், யாழ்ப்பாணம். (11229)

### நூல் விற்பனைக்கு

இலங்கையர் எல்லோருக்கும் நீண்டகாலமாக நாடகவிருந்து அளித்தமைக்காக அரசாங்கத்தினால் கலாபூஷண விருதுவழங்கிக் கௌரவிக்கப்படும் அராலியூர் ந.சுந்தரம்பிள்ளையின் நூல்கள்: I.எங்கள் நாடு II.இலக்கிய விமர்சனம். (11260)

## மீளக்குடியமர்ந்த சரசாலை விவசாயிகளுக்கு உதவிகள் கிட்டவில்லை

தென்மராட்சி,டிசெ.2

சரசாலை வடக்குப் பிரிவில் விவசாயக் குடும்பங்கள் பல மீளக் குடியமர்ந்து விவசாய நடவடிக்கைகளை மீண்டும் ஆரம்பித்துள்ளன.

எனினும் இதுவரை அரசசார்பற்ற நிறுவனங்கள் தமக்கு எந்த வகையான உதவிகளையும் வழங்கவில்லை என மேற்படி விவசாயிகள் தரப்பில் விசனம் தெரிவிக்கப்பட்டது. (எ-117

## மரண அறிவித்தல்

### திருமதி இராமலிங்கம் லோகநாயகி

சிறுப்பிட்டி தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராமலிங்கம் லோகநாயகி 26.11.2002 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் இராமலிங்கத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை - சொர்ணம்மா தம்பதிகளின் அன்பு மகளும் இராஜேஸ்வரியின் அன்புச் சகோதரியும் ஐங்கரன், முரளிகரன், ஞானகரன், தயாகரன், கரன், சாரதாதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும் சாந்தி, சீதாவதி, கோணேஸ்வரி, ஜெயக்குமார்,சுதர்சினி ஆகியோரின் பாசமிகு மாமியும் சாரங்கா, சுவித்தியா, சுபந்தியா, சுகஸ்தியா, அஸ்வின், அனுஷன், அபிஷேக், கீர்த்தனா ஆகியோரின் பாட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.12.2002) செவ்வாய்க் கிழமை பி.ப.4.00மணிக்கு சிறுப்பிட்டி குடும்ப மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இ.ஐங்கரன், இ.தயாகரன்,
இ.ஞானகரன், இ.முரளிகரன் (பிள்ளைகள்).

*சிறுப்பிட்டி தெற்கு,*
*நீர்வேலி.* (11265)

## முடிச்சுமாறிகள் அதிகரிப்பு

யாழ்.-முகமாலை சேவையில் ஈடுபடும் பஸ்களில் முடிச்சு மாறிகளின் தொல்லை அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக வாகனங்களின் இருக்கைகளில் இருக்கும் இவர்கள் நின்று பயணம் செய்வோரின் கைப் பைகளையும், பொதிகளையும், திருடிவிடுகின்றனர்.

இதனால் கைப்பைகளுக்குள் இருக்கும் அடையாள அட்டை, பணம் என்பவற்றைப் பறிகொடுக்கும் பயணிகள் தமது பயணக் கட்டணங்களைக் கூடச் செலுத்த முடியாத நிலையில் அவதிப்படுகின்றனர்.

தினமும் யாழ்ப்பாணத்திலிருந்து முகமாலைக்கு செல்லும் பஸ்கள், மினி பஸ்களிலும் ஏனைய பகுதிகளுக்கு செல்லும் பஸ்களிலும் இப்படியான திருட்டுக்கள் இடம்பெற்று வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (எ-117)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் இராமசாமி செல்லத்துரை

(உரிமையாளர், ஆரியபவான் சைவ உணவகம்,
கைதடிச் சந்தி, கைதடி)

அன்னை மடியில்
13-06-1954

ஆண்டவன் அடியில்
12-12-2001

நெஞ்சிருக்கும் வரை
உங்கள் நினைவிருக்கும்.

என்றும் உங்களை மறவாத:
கோ.சுப்பிரமணியம், இ.முருகையா
(சகோதரர்கள்).

*கைதடிச் சந்தி,*
*கைதடி.* (11261)


03.12.2002 இதழில்

சுடர் ஒளி

விலை 14 ரூபா




★ ஒஸ்லோவில் நடைபெறும் 3ஆம் சுற்றுப் பேச்சுக்கள்

★ வவுனியா இளைஞன் மீது தமிழ்க் குழு சித்திரவதை

★ போராட்ட வழிமுறை மாறலாம் இலட்சியம் மாறப்போவதில்லை

★ மனங்களில் நிறைந்த மாவீரர் நாள்

★ வவுனியாவில் புலிகளின் வரலாற்றுக் கண்காட்சி

★ தியாகங்களாலே அமைதிச் சூழல் வியாக்கியானங்கள் வெறும் ஊதல்
- தேரடி

★ நெடுந்தீவு மக்களின் போராட்டமும் ஈ.பி.டி.பி. கட்சியின் நடமாட்டமும்

★ அன்பழகன் மீது பொலீஸ் பாய்ச்சல் கருணாநிதிக்கு விடுத்த எச்சரிக்கையா?

மற்றும் சித்திரத் தொடர் கதை, இணையத்தளத்திலிருந்து, சினிமா, விளையாட்டு, க்ரைம் டயறி உட்பட பல்வேறு ஆக்கங்கள்.

மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்.

கடலோரத்திலிருந்து படையினரை வெளியேற்றி அந்த இடத்தில்

# மீனை சந்தைப்படுத்த வசதிசெய்யும்படி கொழும்புத்துறை மீனவர்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம்,டிசெ.2

கொழும்புத்துறை பகுதி மீனவர்கள் தாம் பிடிக்கும் கடல் உணவு வகைகளை பாஷையூர் இறங்குதுறைப் பகுதியில் வைத்து சந்தைப்படுத்த அனுமதி வழங்கப்படவேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதுகுறித்து அவர்கள் பொது அமைப்புக்கள் மற்றும் அரச, அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு மகஜர்கள் சமர்ப்பித்துள்ளனர்.

அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

கொழும்புத்துறைப் பகுதி கடற்கரையில் கடந்த 1995ஆம் ஆண்டு முதல் இராணுவத்தினர் காவலரண்களை அமைத்து நிலைகொண்டுள்ளனர். இதனால் அப்பகுதியில் கொழும்புத்துறை மீனவர்கள் சந்தைப்படுத்தல் மற்றும் மீன்பிடித்தலுக்கான ஆயத்தப் பணிகள் முதலான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாதுள்ளது. இதனால் அப்பகுதி மீனவர்கள் பாஷையூர் இறங்குதுறைப் பகுதியிலேயே தமது மீன்களைச் சந்தைப்படுத்தல் மற்றும் கரைக்குத் திரும்பும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த நிலையில் பாஷையூர் மீனவர் சங்கத்தினர் கொழும்புத்துறை மீனவர்கள் தமது பகுதியில் மீன்பிடிப்பதையும், மீன்களைச் சந்தைப்படுத்துவதையும் நிறுத்தவேண்டும் என்று தெரிவித்தனர்.

இதனால் தமது அன்றாட வாழ்க்கைக்காக மீன்களைப் பிடித்துவரும் ஏழை மீனவர்கள் நெடுந்தூரம் எடுத்துச் சென்று விற்பனை செய்வதில் பல சிரமங்களை எதிர்நோக்கவேண்டியுள்ளது.

இதனால் கொழும்புத்துறைப் பகுதியில் இராணுவத்தினர் அகற்றப்பட்டு அப்பகுதி மீனவர்கள் தமது சொந்த இடத்தை மீன்பிடி நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்த உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும். கொழும்புத்துறையிலிருந்து இராணுவத்தினர் வெளியேறும்வரை பாஷையூர்ப் பகுதியில் மீனை சந்தைப்படுத்துவதற்கு அனுமதி அளிக்கப்படுதல்வேண்டும் என்றுள்ளது.

வடமாகாணக் கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத் தலைவர், தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர், போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர், மனித உரிமைகள் அமைப்புக்கள் முதலானவற்றிடம் நேற்றுமுன்தினம் இந்த மகஜர்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.(ஒ-12)

ஏ.சி.சி.ஏ. நிறுவனத்தின்

# கணக்கியல் கற்கைகள் யாழ்ப்பாணத்திலும்!

## முகாமையாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.2

பட்டயத் தராதரம் பெற்ற கணக்கியல் நிறுவனமான ஏ.சி.சி.ஏ. (ACCA) தனது கற்கைநெறிகளை முதற்தடவையாக யாழ்ப்பாணத்தில் அறிமுகப்படுத்தவுள்ளது.

கற்கைநெறிகளின் ஆரம்பம் குறித்து நேற்று இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் நிறுவனத்தின் இலங்கைக்கான முகாமையாளர் அஜித்தா பெரேரா இவ்வாறு தெரிவித்தார்.

நல்லூர் ஜமுனா வீதியில் உள்ள சேம்பர் ஓவ் கொமேர்ஸ் அண்ட் இன்டஸ்ரீஸில் இந்த பத்திரிகையாளர் சந்திப்பு இடம்பெற்றது. அதில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எமது நிறுவனம் உலகில் வேகமாக வளர்ந்து வருகின்ற சர்வதேச தொழில்சார் கணக்கியல் நிறுவனமாகும். கணக்கியல்துறையில் அறிவையும் அனுபவத்தையும் பெறக்கூடிய வகையில் நிறுவனத்தின் கற்கைநெறிகள் தரப்படுத்தப்பட்டுள்ளன. பாடசாலையில் கற்று வெளியேறிய மாணவர்கள்முதல் உத்தியோகத்தர்களவரை கணக்கியல் துறையில் ஈடுபடமுடியும்.

16 வயதுக்கு மேற்பட்ட எவரும் எமது நிறுவனத்தில் கணக்கியல் தொழில்நுட்பவியலாளர் தகைமையைப் பெற்றுக்கொள்ளலாம். கல்வியையும் அனுபவத்தையும் ஒருங்கிணைதது கணககியல், தகவல் தொழில்நுட்பம், முகாமை ஆகிய துறைகளில் மாணவர்கள் தங்கள் அறிவை வளர்க்க முடியும். அத்துடன் காலவரையறையின்றி மாணவர்கள் தங்கள் வசதிக்கேற்ப பயிலலாம்.

இவை தொடர்பான மேலதிக விவரங்களைப் பெற விரும்புவோர் நல்லூர், ஜமுனா வீதியில் இலக்கம் 51 இல் உள்ள சேம்பர் ஓவ் கொமேர்ஸ் அண்ட் இன்டஸ்ரீஸில் உள்ள தகவல் பிரிவுடன் தொடர்புகொள்ள முடியும்.-

என்று அவர் மேலும் தெரிவித்தார்.

(எ-10-8)

# சட்டவிரோதமாகக் குடியேறுபவர்களை தடுக்கும் சட்டமூலம் சுவிஸில் தோல்வி

பேர்ண்,டிசெ.2

சுவிற்ஸர்லாந்தில் சட்டவிரோதமாகக் குடியேறும் வெளிநாட்டவர்களை நாடுகடத்த வழிசெய்யும் சட்டமூலம் அந்நாட்டு நாடாளுமன்றத்தில் தோல்வியடைந்துள்ளது.

சட்டவிரோதமாக நாட்டுக்குள் நுழைபவர்களை உடன் கைதுசெய்து அவர்களது சொந்த நாட்டுக்கு திருப்பி அனுப்பவும், கைதுசெய்யப்படுபவர்களை முகாமில் தடுத்து வைக்கவும், அவர்கள் வேலைவாய்ப்பு பெறுவதைத் தடுக்கவும்வழி செய்யும் சட்ட மூலம் ஒன்று நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்பட்டிருந்தது.

இந்த சட்டமூலம் மதான விவாதத்தின் முடிவில் இடம்பெற்ற வாக்கெடுப்பில் அதிகவாக்கு வித்தியாசத்தில் அச்சட்டமூலம் தோற்கடிக்கப்பட்டது. (ஒ-3)

அராலி தெற்கு, கிழக்குப் பகுதியில்

# வீடமைப்புத் திட்டம் பூர்த்தியாக நிதியுதவி பெற்றுத் தரப்படும்!

## சிவாஜிலிங்கம் எம்.பி. வாக்குறுதி

'ஜன உதான' வீடமைப்புத் திட்டத்தின் கீழ் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினரால் அராலி கிழக்கு, அராலி தெற்கு ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்ட வீடமைப்புத் திட்டத்தினை பூர்த்தி செய்வதற்கு ஒவ்வொரு வீடுகளுக்கும் தலா 50ஆயிரம் ரூபாவினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் உறுதியளித்துள்ளார்.

வலி.மேற்கு, சங்கானை பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் அண்மையில் பிரதேச செயலகத்தில் நடைபெற்றது. பிரதேச செயலர் செ.இரத்தினம் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் எம்.பி. சிவாஜிலிங்கமும் கலந்துகொண்டார்.

இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்ட வீடமைப்பு அலுவலர், மேற்படி வீடமைப்பு திட்டத்தினை பூர்த்தி செய்வதற்கு ஒவ்வொரு வீடுகளுக்கும் தலா 50ஆயிரம் ரூபா வழங்கப்பட வேண்டும் என்றும் - அதன் மூலமே வீடமைப்புத் திட்டத்தினை நிறைவு செய்துகொள்ள முடியும் என்றும் - தெரிவித்தார்.

இதற்குப் பதிலளிக்கும்போதே எம்.பி. சிவாஜிலிங்கம் வீடமைப்புத் திட்டத்தை பூர்த்தியாக்கும் வகையில் மேலதிக நிதியினை பெற்றுத்தர நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்தார்

(எ-175)

# குடியிருப்பினுள் செல்ல முயன்ற ஈ.பி.டி.பியினர் விரட்டப்பட்டனர்

நெடுந்தீவு,டிசெ.2,

நெடுந்தீவின் பிரதேச சபைக் கட்டடப் பகுதியில் நிலைகொண்டுள்ள ஈ.பி.டி.பி உறுப்பினர்களில் சிலர் மக்கள் குடியிருப்புப் பகுதிக்குள் செல்ல முற்பட்டவேளை மக்கள் கூடி ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர்.

நேற்றுமுன்தினம் நண்பகல் 12 மணியளவில் முகாமில் இருந்து புறப்பட்ட ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் ஏழு பேர் குடியிருப்புக்கள் உள்ள பகுதிக்குள் செல்ல முனைந்ததாகவும் -

அவ்வேளை மக்கள் ஒன்றுகூடி கற்களை வீசி ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டதாகவும் - கூறப்பட்டது.

இதனையடுத்து அவர்கள் தமது முகாமுக்குள் சென்றுவிட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

அதேசமயம் கடலில் குளிக்கச் சென்ற ஈ.பி.டி.பி. உறுப்பினர் ஒருவரையும் மக்கள் விரட்டியடித்ததாகத் தெரியவந்தது. நெடுந்தீவைவிட்டு ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் வெளியேற வேண்டும் என்று கோரி மேற்கொள்ளும் மக்களின் மறியல் மற்றும் உண்ணாவிரதப் போராட்டங்கள் தொடர்கின்றன.

ஒ-3)

## வெண்புறா அலுவலகம் யாழ்ப்பாணத்திலும்!

யாழ்ப்பாணம்,டிசெ.2

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் இயங்கும் 'வெண்புறா' செயற்கை அவயவங்கள் பொருத்தும் நிலையத்தின் அலுவலகம் ஒன்று எதிர்வரும் 5ஆம் திகதிமுதல் யாழ்ப்பாணத்தில செயற்படவிருக்கிறது.

யாழ்ப்பாணத்தில் இருந்து 95ஆம் ஆண்டு இடம்பெயர்ந்து வன்னியில் இயங்கிவரும் இந்த நிலையத்தின் கிளை அலுவலகம் எதிர்வரும் 5ஆம் திகதி யாழ்ப்பானத்தில் திறக்கப்படவிருக்கின்றது.

யாழ்.செயலகத்திற்கு சமீபமாக சோமசுந்தரம் அவனியூவில் இந்த நிலையம் அன்றைய தினம் முற்பகல் 10 மணிக்கு சம்பிரதாயபூர்வமாகத் திறந்துவைக்கப்படும். (ம-3)

## அமைதிக்கு...

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்றத்தில் யுத்தத்தை விரும்பாத மக்கள், நலன்பேணும் சகல கட்சிப் பிரதிநிதிகளையும் கட்சி வேறுபாடுகளுக்கு அப்பால் ஒன்றிணைத்து புரிந்துணர்வுடன் செயற்பட ஒரு தேசிய அரசை நிறுவ முன்வரவேண்டும். தேசிய அரசின்மூலம் நாட்டில் கொழுந்துவிட்டெரியும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணப்படவேண்டும்.

சிங்களம், தமிழ் இரண்டும் இலங்கை மாதாவின் இரு கண்கள் என்பதை அனைவரும் உணர்தல் வேண்டும். சகல கருமங்களிலும் இருமொழிப் பரிமாற்றம் கட்டாயப்படுத்தப்படல்வேண்டும்.

அத்துமீறிய குடியேற்றத் திட்டங்கள் தடைசெய்யப்படவேண்டும்.

தமிழ்ப் பகுதிகளில் சுதந்திரமான பொருளாதாரத் திட்டம் வகுக்கப்படவேண்டும்.

இவ்விதம் நீதியாகவும் நியாயமாகவும் செயல்பட்டால் பிரிவினைக்கே இடம் ஏற்படாது. ஆகவே, தேசிய அரசை நிறுவி சமாதான முறையில் தீர்வுகாண முயற்சிக்கவேண்டும். இதற்கு ஜனாதிபதியும், பிரதமரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டியது அவசியமாகும். இதுவே மக்களின் எதிர்பார்ப்பாகும். ☆

# கல்விச்சாலைக் காட்சிகள்



யாழ்.சென்.ஜோண் பொஸ்கோ வித்தியாலயத்தில் இருந்து இந்த ஆண்டு நடைபெற்ற ஐந்தாம்தர புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களின் பெற்றோர்களின் ஏற்பாட்டில் பாடசாலை அதிபர் மற்றும் ஆசிரியர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

மேற்படி கௌரவிப்பு நிகழ்வில் அதிபர், ஆசிரியர்கள், விருந்தினர்கள் பெற்றோர்களால் விழா மண்டபத்துக்கு அழைத்து வரப்படுவதைப் படத்தில் காணலாம். (எ-10)



சித்தன்கேணி ஸ்ரீ கணேச வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றபோது, அதில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட யாழ்.போதனா வைத்தியசாலை உணர்ச்சி நீக்கவியல் நிபுணர் வைத்திய கலாநிதி இ.கணேசமூர்த்தி உரையாற்றுவதைப் படத்தில் காணலாம்.

விழாவுக்குத் தலைமை வகித்த வித்தியாலய அதிபர் க.சந்திரசேகரன் மற்றும் சிறப்பு விருந்தினர்கள் மேடையில் அமர்ந்துள்ளனர். (எ-135)



கொக்குவில் இந்துக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட கல்லூரியின் பழைய மாணவர் சங்கக் கொழும்புக் கிளைத் தலைவர் க.கேதீஸ்வரனின் பாரியார் திருமதி விஜயலட்சுமி கேதீஸ்வரன் மங்கள விளக்கேற்றுவதைப் படத்தில் காணலாம். அருகில் பிரதம விருந்தினர் க.கேதீஸ்வரன், அதிபர் பொ.கமலநாதன் மற்றும் ஆசிரியர்கள் காணப்படுகின்றனர். (எ-152)



பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை இந்து மன்றக் கலைவிழாவையும் பரிசளிப்பு விழாவையும் முன்னாள் மாவட்ட நீதிபதி எஸ்.திருநாவுக்கரசு மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதைப் படத்தில் காணலாம். அருகில் இந்துமன்ற பொறுப்பாசிரியை திருமதி ஜமுனா நந்தகுமார், அதிபர் திருமதி செல்வமலர் சுந்தரேசன், திருமதி திருநாவுக்கரசு ஆகியோர் காணப்படுகின்றனர். (எ-173)

# மேலும் பல பகுதிகளுக்கு நேற்றுமுதல் மின்சாரம்

யாழ்ப்பாணம்,டிசெ.2

அராலி தெற்கு,அளவெட்டி, உரும்பிராய், நிலாவரை, புத்தூர், நீர்வேலி, பகுதிகளுக்கான மின் விநியோகம் நேற்று சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்து கலாசார அமைச்சர் தி. மகேஸ்வரன், தமிழ்க் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான அப்பாத்துரை விநாயகமூர்த்தி, வீ.ஆனந்தசங்கரி ஆகியோர் கூட்டாக மின்சாரம் வழங்கும் பணியை ஆரம்பித்து வைத்தனர்.

மேற்படி மின்விநியோகத்தை முன்னிட்டு எரிபொருள், மின்சக்தி அமைச்சர் கரு ஜெயசூரியவினால் அனுப்பிவைக்கப்பட்ட ஆசிச் செய்தியை மின்சாரசபையின் வடமாகாண உதவிப் பொதுமுகாமையாளர் எஸ்.முத்துரெட்ணானந்தன வாசித்தார்.

பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் பொ.சிவபாதம்,சுன்னாகம் மின்சார நிலையப் பொறுப்பதிகாரி எஸ்.வல்லிபுரம் உட்பட மின்சாரசபை அதிகாரிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (எ-5-4)





உரும்பிராய்ப் பகுதிக்கான மின் விநியோக ஆரம்ப நிகழ்வில் கலந்து கொண்ட இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர் அ.விநாயகமூர்த்தி ஆகியோர் அழைத்துவரப்படுவதை முதலாவது படத்திலும் அமைச்சர் தி.மகேஸ்வரன் எம்.பிக்களான அ.விநாயகமூர்த்தி, வீ.ஆனந்தசங்கரி ஆகியோர் பெயர்ப்பலகையைத் திறந்து வைப்பதை இரண்டாவது படத்திலும் காணலாம். மின்சார சபையின் வடபிராந்திய உதவிப் பொதுமுகாமையாளர் எஸ்.முத்துரட்ணானந்தன் மற்றும் அதிகாரிகளும் படங்களில் காணப்படுகின்றனர். *(படங்கள் :வசந்தன்)*

## யுத்த சூழலால் அழிவுகளைச் சந்தித்த

# வடக்கு - கிழக்கை மீளக்கட்டியெழுப்ப புலம்பெயர்ந்த தமிழர்கள் உதவவேண்டும்!

## லண்டன் மாவீரர் தின நிகழ்வில் அன்ரன் பாலசிங்கம்

லண்டன்,டிசெ.2

கடந்த 20 வருட காலம் தொடர்ந்த யுத்தம் காரணமாக அழிந்துபோய் கிடக்கும் வடக்கு - கிழக்கை மீள் கட்டுமானம் செய்யும் பணியில் புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் நேரடியாகப் பங்குகொள்ளவேண்டும்.

- இப்படி வேண்டுகோள் விடுத்தார் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம்.

லண்டனில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற மாவீரர் தின நிகழ்வில் கலந்துகொண்டு பேசுகையிலேயே அவர் இவ்வாறு கோரிக்கை விடுத்தார்.

அங்கு அவர் பேசுகையில் மேலும் கூறியதாவது:-

கடந்த 20 வருட யுத்த சூழல் காரணமாக வடக்கு - கிழக்கு மக்களின் உடமைகள் நாசமாகியுள்ளன. அத்துடன் பல்லாயிரக்கணக்கானவர்கள் ஊனமடைந்துள்ளனர்; பலர் உயிரிழந்துள்ளனர். அவர்களுக்கு உதவிகள் வழங்கப்படவேண்டும். வெளிநாடுகளில் புலம்பெயர்ந்துவாழும் தமிழ் மக்கள் இந்தப் பணிகளுக்கு தாராளமாக உதவவேண்டும்.

வடக்கு - கிழக்கில் பெரும் கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளவேண்டியுள்ளது. அவற்றுக்கு தொழில்நுட்ப வல்லுநர்கள், பொறியியலாளர்கள் தேவையாக உள்ளனர்.

எனவே, புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வதியும் பொறியியலாளர்கள் நாடு திரும்பி இந்தப் பணிகளில் ஈடுபடவேண்டியுள்ளது அவசியம். வெளிநாடுகளில் அவர்கள் அநுபவிக்கும் வசதிகள் அங்கு இல்லாவிட்டாலும், எமது நாட்டை கட்டி எழுப்பவேண்டும் என்ற உணர்வுடன் அவர்கள் அங்கு சென்று பணியாற்ற



வேண்டும் - என்றார்.

அன்ரன் பாலசிங்கத்தின் இந்த உரையின் ஒருபகுதி நேற்றைய உதயனில் வெளியாகியிருந்தது. (எ-3)

# யாழ்ப்பாணத்தில் எய்ட்ஸ் நோயாளிகள் கவலைதரும் எண்ணிக்கையில் உள்ளனர்!

## கலந்துரையாடலில் சுகாதார அதிகாரி வேதனை

மண்டைதீவு,டிசெ.2

'ஆட்கொல்லி நோயான எய்ட்ஸ் நோயின் தாக்கமும் அதிக்கமும் யாழ்.குடாநாட்டில் கணிசமாக உள்ளமை வேதனைக்கு உரியது.'

- இவ்வாறு தெரிவித்தார் யாழ். போதனா வைத்தியசாலை சுகாதார வைத்திய அதிகாரி நக்கீரன்.

கடந்த வாரம் யாழ்.மத்திய கல்லூரியில் நடந்த ஆசிரியர்களுக்கான கலந்துரையாடலில் கலந்துகொண்டு கருத்துரை வழங்கியபொழுதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"இரண்டு கோடிக்கும் குறைவான மக்கள் உள்ள இலங்கையின் வைத்தியசாலைகளின் தகவல்களின்படி யாழ்ப்பாணத்தில் கவலை தரும் எண்ணிக்கையில் எய்ட்ஸ் நோயாளர்கள் உள்ளனர்.

யாழ்.போதனா வைத்தியசாலையின 33ஆம் இலக்க அறையின் கண்காணிப்பில் உள்ள இவர்களது எண்ணிக்கை இலங்கையின் சனத்தொகை விகிதத்திற்கு மிகவும் அதிகமாகவே உள்ளது.

1950களின் பின் இனங்காணப்பட்ட இந்த நோய், மனித குரங்கில் இருநது ஓர் அமெரிக்க இளைஞனால் விலை கொடுக்காமல் பெறப்பட்டதாகும். கடந்த 20வருட காலத்தில் 4 கோடி மக்கள் எய்ட்ஸ் நோயாளிகளாக உலகத்தில் உள்ளனர்.

85 வீத நோய்த்தாக்கத்துக்குட்பட்டவர்களிடமே இந்நோயின் அறிகுறிகள் வெளித் தெரியும். குறைந்த தாக்கம் உடையவர்களிடம் நோய் அறிகுறிகள் தென்படாது. இவர்கள் 'காவி'களாக (Careers) இருப்பர். இவர்களை இனங்காண்பது கடினம். இவர்களது தொகை நோயாளர்களின் தொகையிலும் அதிகமாகவே இருக்கும்.

நோய் தொற்று ஏற்பட்டு மூன்று மாத காலத்திற்கு எலிசா பரிசோதனை (Eliza test) மூலம் கண்டறிய இயலாது. இந்தக் காலத்தில் எச்.ஐ.வி கிருமிகள் மறைநிலையில் இருப்பதே காரணமாகும். நேர்நிலைக்கு மாறும்பொழுதே நோயத் தொற்றைக் கண்டறியலாம்.

யாழ்ப்பாணத்தில் 100 வீதமான எய்ட்ஸ் தொற்று பாலியல் மூலமே ஏற்பட்டுள்ளது. இலங்கையில் அது 98 வீதமாகும். மிகுதி 2 வீதமும் நோயாளரைப் பராமரித்தல், இரத்த மாற்று போன்ற சந்தர்ப்பத் தொற்றுகளாகும். இத்தகைய சந்தர்ப்பத் தொற்றுக்கு தென்னிலங்கையைச் சேர்ந்த வைத்திய நிபுணர் ஒருவரும் ஆளாகி உள்ளார்.

கணவனுக்கு திருமணத்தின்போது ரூபா எட்டு லட்சத்தை சீதனமாகக் கொடுத்து ஒரு யுவதி எய்ட்ஸ் நோயை பெற்றுக்கொண்ட துன்பியல் நிகழ்வு யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றுள்ளது.

'எய்ட்ஸ்' பீதி, முறையற்ற பாலியல் தொடர்புகளைக் கொண்ட மாணவர்களிடையே (உயர் வகுப்பு) உளவியல் தாக்கத்தையும் மனப் பிறழ்வுகளையும் ஏற்படுத்தியுள்ளதை நாங்கள் அவதானித்துள்ளோம்.

"மருந்து கண்டறியப்படாத இந்த நோயை தவிர, வெட்டை நோய் என்று கூறப்படுகின்ற 'சிபிலிஸ்', 'கொனோரியா' போன்ற பாலியல் தொற்று நோயாளர்களும் எம்மிடையே காணப்படுகின்றனர். யாழ்ப்பாணத்தில் உள்ளவர்களில் 30வீதமானவர்களின் நடத்தைப் பிறழ்வுகளே இதற்குக் காரணம். வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களைத் தேடி செல்லுதல், யுத்தம், அகதி வாழ்க்கை போன்றவை இதற்குக் காரணங்களாகும்.

இந்த நோயின் காரணமாக, காரணமற்ற கருச்சிதைவுகள், ஆண், பெண் மலட்டுத் தன்மை, அங்கவீனமான பிரசவம், குருட்டு, செவிட்டுத் தன்மை மற்றும் அண்ணம் பிளத்தல் போன்ற குறைபாடுகள் ஏற்படும்.

இந்தச் செய்திகளை பாடசாலைகள், சமூக மட்டத்திற்கு எடுத்துச் செல்லவேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும்.

கட்டிளம் பருவத்தைச் சேர்ந்த பெண்கள் 9 பேர் எமது கண்காணிப்பில் (Fallow-up) உள்ளனர் என்பதே எமது சமூகத்திற்கு விழிப்புணர்வு தேவை என்பதற்கு போதுமானதாகும் - என்றார் அவர். (ஒ-88)

# திக்கம் வடிசாலையை மீண்டும் கொத்தணியிடம் ஒப்படைக்குக!

## பிரதமருக்கு மகஜர் சமர்ப்பிப்பு

வடமராட்சி,டிசெ 2

திக்கம் வடிசாலையை மீளவும் நிர்வகிப்பதற்கான வாய்ப்பினை தமக்கு பெற்றுத்தருமாறு கோரி, வடமராட்சி பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு மகஜர் அனுப்பி வைத்துள்ளது.

அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

சாதாரண தொழிலாளர்களான பனம் தொழில் வல்லுநர்களின் கூட்டுறவு அமைப்பான வடமராட்சி பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி 'திக்கம் வடிசாலையை மீளப் பெற்றுத்தரல்' என்ற தலைப்பிட்டு கடந்த 25.09.2002 அன்று பருத்தித்துறை 'பிரதேச செயலர் ஊடாக தங்களுக்கு அனுப்பிய கடிதம் தொடர்பில், இன்று வரை எதுவித பதிலும் கிடைக்காமை குறித்து நாம் மிகுந்த கவலை அடைகின்றோம்.

எம்மால் நிர்வகிக்கப்பட்டுவந்த கூட்டுறவு வடிசாலையானது கடந்த 08.01.2002 அன்று முதல் பொது மக்கள் ஐக்கிய முன்னணி அரசின் புனர்வாழ்வு, தமிழ்மொழி அமுலாக்கல் அமைச்சினால் வடிசாலையின் வரலாற்றுக்குப் புறம்பான - தவறான - தகவல்கள் புனையப்பட்டன. அத்துடன், அவர் அக்கால அமைச்சரவைக்கும் சமர்ப்பிக்கப்பட்டு, மந்திரி சபையில் தீர்மானத்தை நிறைவேற்றச் செய்தபின்பு எம்மிடமிருந்து 600 லட்சம் பெறுமதியான சொத்துக்களை பறித்தெடுத்து பனை அபிவிருத்திச் சபையிடம் ஒப்படைத்ததுடன் தமது நலன்களைப் பெற்று வந்துள்ளார்.

கடந்த தேர்தல் மூலம் தாங்கள் பிரதமரானபோதும், எமது உரிமைகளை பெற்றுத்தருவதாக வாக்குறுதியளித்த இந்து கலாசார அமைச்சர் பதவி ஏற்றபோதும் எமது சொத்தான திக்கம் வடிசாலையை மீள எமது நிர்வகிப்பிற்கு கிடைக்கும் என மிகுந்த ஆவலுடன் எதிர்பார்த்தோம். ஆனால், ஒருவருடம் பூர்த்தியாகும் காலம் நெருங்கிவந்தபோதும் எமது தொழிலாளர் உரிமைகள் இன்றுவரை மறுக்கப்பட்டு வருவதாகவே நாம் கருதுகின்றோம்.

இந்நிலையில், தங்களுக்கு எழுதிய 25.09.2002ஆம் திகதிய கடிதத்துக்கு மேலாக, இந்து கலாசார அமைச்சருக்கு கடந்த 12.11.2002 ஆம் திகதியிட்டு திக்கம் வடிசாலையை எமக்கு மீளவும் கையளிப்பது தொடர்பில் தங்கள் அமைச்சரவையிடம் எமது கோரிக்கையைச் சமர்ப்பித்து, எங்களின் சமூக நலன்களுக்கு உதவுமாறு கோரி ஒரு கடிதத்தை தொலைநகல் மூலம் அனுப்பியிருந்தோம் அது தொடர்பிலும் இன்றுவரை எதுவித பதிலும் கிடைக்கவில்லை.

எனவே, தயவுசெய்து சாதாரண பனம் தொழிலாளர்களாகிய எமது சமூக நலன் கருதியும், தொழிலாளர்களது உரிமைகளை வழங்கும் வகையிலும் மனித நேயத்தின் அடிப்படையில், இக்கோரிக்கைக்கு முக்கியத்துவம் கொடுத்து தங்கள் அமைச்சரவையில் இவ்விடயத்தைச் சமர்ப்பித்து ஒரு நல்ல தீர்மானத்தை எமக்குப் பெற்றுத்தருமாறு கேட்டுக்கொள்கின்றோம் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-173-70)

### அமைச்சர் சந்திரசேகரன் மட்டக்களப்புக்கு விஜயம்

சமூக அபிவிருத்தி அமைச்சரும் நீர்ப்பாசனத்துறைப் பிரதியமைச்சருமான பி.சந்திரசேகரன் நேற்று மட்டக்களப்புக்கு விஜயம் செய்தார்.

களுதாவளை, குருகுலம், களுவாஞ்சிக்குடி, பழுகாமம் போன்ற இடங்களுக்குச் சென்ற அமைச்சர், இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசங்களுக்கும் சென்றார். (ஐ)

## துணை மருத்துவ ஊழியர் வேலைநிறுத்தம் நீடிப்பு

கொழும்பு,டிசெ.2

அரசாங்க வைத்தியசாலைகளில் துணைமருத்துவ ஊழியர்கள் மேற்கொண்டிருக்கும் வேலை நிறுத்தம நீடிக்கிறது. அவர்கள் எதிர்வரும் புதனன்று நாடாளுமன்ற வீதி சுற்றுவட்டம் அருகே பெரும் ஆர்ப்பாட்டம் ஒன்றில் ஈடுபடவிருக்கின்றனர்.

கடந்த வியாழக்கிழமை முதல் துணைமருத்துவ ஊழியர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கின்றனர். இந்த வேலைநிறுத்தத்தினால் வைத்தியசாலைகளில் பல சேவைகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. (ஐ)



மக்கள் வங்கியின் யாழ். கஸ்தூரியார் வீதிக் கிளையின் செயற்பாடுகள் இணையில் கணனி மயப்படுத்தப்பட்டன. இது தொடர்பாக இடம்பெற்ற நிகழ்வில் வங்கியின் பிராந்திய உதவி முகாமையாளர் க.ஆனந்தராசா முதல் வைப்பினை வாடிக்கையாளரிடமிருந்து பெற்று சேவையை ஆரம்பித்து வைப்பதைப் படத்தில் காணலாம். (எ)

# நடைபாதைக் கடைகள் அப்புறப்படுத்தப்பட்டன

யாழ்நகர் மரக்கறிச் சந்தைப் பகுதியிலிருந்த நடைபாதை' கடைகளை யாழ்.மாநகர சபை அதிகாரிகள் பொலீஸாரின் உதவியுடன் நேற்றுக் காலை அப்புறப்படுத்தினர்.

நடைபாதைக் கடைகளை உடனடியாக அப்புறப்படுத்துமாறு மாநகர அதிகாரிகள் வியாபாரிகளை கேட்டதாகவும் -

அப்போது வியாபாரிகள் கடைகளை அப்புறப்படுத்துவதற்கு சம்மதம் தெரிவிக்காததினால் இரு பகுதியினருக்கும் இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டதாகவும் - கூறப்படுகிறது.

இதனையடுத்தே மாநகர சபை அதிகாரிகள் பொலீஸாரின் உதவியுடன் கடைகளை அப்புறப்படுத்தினார்கள்.

யாழ்.மரக்கறி சந்தைப் பகுதியில் இருந்து அப்புறப்படுத்தப்பட்ட நடைபாதை வியாபாரம் நேற்றுத் தொடக்கம் முற்றவெளிப் பகுதியில் தொடர ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

முற்றவெளி புல்லுக்குளத்திற்கு முன்பாக இதற்கென துப்புரவு செய்யப்பட்ட இடத்தில் நடைபாதை வியாபாரத்தை நடத்துவதற்கான ஏற்பாடுகளை ஏற்கனவே மாநகராட்சி மன்றம் மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நடைபாதை வியாபாரிகள் முண்டியடித்து நேற்று இத்தரையில் தமக்கு என இடங்களைப் பிடித்துக் கொண்டதைக் காணமுடிந்தது. (ஒ-17)

## நாவலர் குருபூசை தின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,டிசெ.2

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குருபூசை நிகழ்வுகள் எதிர்வரும் 5ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 2மணிமுதல் நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பண்ணிசை, செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகனின் விசேட சொற்பொழிவு என்பன இடம் பெறும். (எ)

## மருந்துக் கலவையாளர் இல்லாததால் நோயாளர் சிரமம்

தென்மராட்சி,டிசெ.2

சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலையில் கடந்த ஆறு மாதங்களாகக் கடமையாற்றிய மருந்துக் கலவையாளர் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு இடமாற்றப்பட்டார். இதனால் தற்போது சாவகச்சேரி வைத்தியசாலைக்கு வரும் நோயாளர்கள் பெரிதும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு தினமும் 350இற்கும் மேற்பட்ட வெளி நோயாளர்களும் 150இற்கும் மேற்பட்ட கிளினிக் நோயாளர்களும் சிகிச்சை பெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை ஆஸ்பத்திரி பிரசவ விடுதி ஆரம்பிப்பதற்கான ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றபோதிலும் இதற்குரிய மருத்துவ உபகரணங்கள் இன்னமும் வந்து சேராததால் பிரசவ விடுதியை ஆரம்பிக்க முடியவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-117)

## சண்டிலிப்பாய், பண்டத்தரிப்பிலும் கால்நடை தீவன விற்பனை நிலையம்

### விரைவில் நிறுவுவதற்கு ஏற்பாடு

வலி.தெற்கு.டிசெ.2

சண்டிலிப்பாய் பிரதேச கால்நடை வைத்திய அலுவலகர் பிரிவில் இரண்டு இடங்களில் பால் கொள்வனவு, கால்நடை தீவன விற்பனை நிலையம் என்பன அமைக்கப்படவுள்ளன.

சண்டிலிப்பாய் பிரதேசத்தில் மேற்படி சேகரிப்பு விற்பனை நிலையங்களை மேலும் சில இடங்களில் அமைக்குமாறு யாழ்.மாவட்ட அபிவிருத்திச் சங்கத்தினர் வழங்கிய ஆலோசனையின் பேரில் இரு இடங்களில் அவற்றை அமைக்க உத்தேசிக்கப்பட்டிருப்பதாக மேற்படி பிரதேச கால்நடை வைத்திய அதிகாரி தெரிவித்தார்.

இந்த நிலையங்களை சண்டிலிப்பாயிலும், பண்டத்தரிப்பிலும் நிறுவுவதற்கு கால்நடை வைத்திய அலுவலகத்தினர் சிபார்சு செய்துள்ளனர் எனவும் - மேலும் கூறப்பட்டது.

இதற்கிடையில் மேற்படி இடங்களில் அமையவுள்ள நிலையங்களுக்கு பால் வழங்கக்கூடிய பண்ணையாளர்களின் பெயர், விவரங்கள் மற்றும் வழங்கப்படக்கூடிய பாலினளவு போன்ற விவரங்களை விரைவில் சண்டிலிப்பாய் கால்நடை வைத்தியர் பணிமனையில் சமர்ப்பிக்குமாறு கால்நடை வளர்ப்போரை கால்நடை வைத்திய அதிகாரி கேட்டுள்ளார்.

சம்பந்தப்பட்ட இடங்களின் கிராம சேவை அலுவலர்கள் இவை குறித்து பண்ணையாளர்களுக்கு அறிவுறுத்தி, அவர்களின் விவரங்களை விரைவில் அறிவிக்க வேண்டும் என்றும் - அவா தெரிவித்துள்ளார்.

சித்தன்கேணி, மானிப்பாய் ஆகிய இடங்களில் மட்டுமே தற்போது இவ்வாறான நிலையங்கள் செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (எ-152)


## 45ஆம் நாள் நினைவலைகள்



தோற்றம் 28 - 02 - 1951

மறைவு 19 - 10 - 2002

### அமரர் செல்லத்துரை செல்வநாயகம்

**பொட்டணிந்து பூவணிந்து பட்டணிந்த காலம்போய்**
**பட்டமரம் போலாகிவிட்டேன்**
**பெற்ற எங்கள் கடமைகளும் தீர்ந்ததென்று நீத்துவிட்டீர்!**
**எத்தனையோ கனவு கண்டோம்!**
**அத்தனையும் நனவாக்கி அகன்றுதான் போனாயோ**
**தெய்வமே எம் மனையை விட்டு?**

*நாவற்குழி கிழக்கு,*
*தச்சன்தோப்பு.*

(11266)

பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

### திருமதி ஐயாத்துரை சரஸ்வதி

கோண்டாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் சுதுமலை தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஐயாத்துரை சரஸ்வதி அவர்கள் நேற்று (01.12.2002) ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஐயாத்துரையின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற செல்லப்பா - சின்னப்பிள்ளை ஆகியோரின் அன்பு மகளும் காலஞ்சென்ற வீரசிங்கத்தின் பாசமிகு சகோதரியும் பரமநாதன் (மில் - கூழாவடி, ஆனைக்கோட்டை), பரமசிவம் (மில் - கொக்குவில்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சுசீலாவதி, தங்கரத்தினம் (கிளி) ஆகியோரின் மாமியும் பகீரதன், அருளானந்தன் பிரதீபா, சுமித்ரா, அனுசியா, வினிதா வாகீசன், சிவசுதன், விஜித்தா, சாதுரியா, சிந்துஜா ஆகியோரின் பேர்த்தியும் அர்ச்சனாவின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.12.2002) திங்கட்கிழமை காலை 10.00 மணியளவில் சுதுமலையிலுள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*குருந்தடி பிள்ளையார் கோயிலடி,*
*சுதுமலை தெற்கு.*

(11268)

தகவல்:
பரமநாதன்
(மகன்).

## NEW SCIENCE CENTRE

வெலிங்டன் சந்தி அருகில்
"Waves & Vibration"
(அலைகளும் அதிர்வுகளும்)
ஆரம்பம்: 3.12.2002
Tue. 8 - 10 a.m.
BY:-சந்திரப்பிரகாஸ் (S.P.)
(11264)

## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

### உத்தியோகபூர்வ முடிவுகள்

| | | | |
|---|---|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 427 | டிக்கட்டின் நிறம் - சிகப்பு | |
| திகதி | 29.11.2002 | செல்லுபடியாகும் தொடர் இல. 5590419-5603576 | |

வெற்றி இலக்கங்கள் **01 11 36 43**

லக்கினம் சிங்கம்



ஜக்பொட் பரிசு
ரூபா. 1,655,550/-
வெல்லப்படவில்லை

இந்த செவ்வாய்க்கிழமைக்கான ஜக்பொட் ரூபா **2,305,450/-**

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரூ.) | மொத்தப் பரிசுத் தொகை(ரூ.) |
|---|---|---|---|
| 1 இல | 291,039 | 10 | 2,910,390 |
| 2 இலக்கங்கள் | 26,758 | 20 | 535,160 |
| 1 இல + லக்கினம் | 26,478 | 30 | 794,340 |
| 2 இல + லக்கினம் | 2,370 | 100 | 237,000 |
| 3 இலக்கங்கள் | 713 | 500 | 356,500 |
| 3 இல + லக்கினம் | 74 | 5,000 | 370,000 |
| 4 இலக்கங்கள் | 03 | 100,000 | 300,000 |
| 4 இல + லக்கினம் | - | 1,655,550 | - |
| மொத்தம் | 347,435 | - | 5,503,390 |

மொத்தப் பரிசுத் தொகை
ரூபா. 5,503,390/-

தொடர் இல. 4605479க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுகள் 2002 டிசம்பர் 03ம் திகதி செவ்வாய்க்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் பஜாஜ் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

5598091-2-52
5591782-5-62
5602783-1-16
5595508-4-75
5594016-4-41

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

PHOENIX O&M

## சனிக்கிழமை அதிர்ஷ்டம்



### உத்தியோகபூர்வ முடிவுகள்

செல்லுபடியாகும் டிக்கட் தொடர் இல. 3222998 இருந்து 3240328 வரை
சீட்டிழுப்பு இல. 1354
திகதி 30.11.2002

வெற்றி எண்கள் **22 37 40 41 47**

போனஸ் எண் **52**

ஜக்பொட் பரிசு
ரூபா 2,380,800/- வெல்லப்பட்டது.

| பொருந்திய எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத்தொகை | தொகை |
|---|---|---|---|
| 5 | 01 | 2,380,800/- | 2,380,800/- |
| 4 எண்களுடன் போனஸ் எண் | 01 | 100,000/- | 100,000/- |
| 4 | 101 | 10,000/- | 1,010,000/- |
| 3 | 5,474 | 500/- | 2,737,000/- |
| 2 | 80,715 | 20/- | 1,614,300/- |
| சீட்டிழுப்பில் ஆகக்குறைந்த 22ம் எண் (போனஸ் எண் தவிர்த்து) | 111,913 | 10/- | 1,119,130/- |

வெல்லப்பட்ட மொத்த தொகை ரூபா.9,161,230/-

இந்த புதன்கிழமைக்கான ஜக்பொட்
ரூபா 1,500,000/-

தொடர் இல. 2245881க்கு மேற்பட்ட ஊதா நிற டிக்கட்டுகள் 2002 டிசம்பர் 04ம் திகதி புதன்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிக்கிழமை அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் தங்கப்பரிசு வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

3234586-4-73
3224445-3-43
3237616-2-30
3231370-9-36
3229408-2-83

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி,
கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

PHOENIX O&M

# உலகக் கிண்ணப் போட்டி அணியில் களுவிதாரனவுக்கு இடமில்லை

கொழும்பு,டிசெ.2

எதிர்வரும் பெப்ரவரி மாதம் நடைபெறவுள்ள உலகக் கிண்ணப்போட்டிகளுக்கான இலங்கை அணியிலிருந்து சிரேஷ்ட விக்கெட்காப்பாளர் ரொமேஷ் களுவிதாரன நீக்கப்பட்டுள்ளார்.

இப்போட்டிகளில் பங்குபற்றவுள்ள 30 பேர் கொண்ட பயிற்சிக் குழாம் விவரம் கடந்த 28ஆம் திகதி அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் ரொமேஷ் களுவிதாரன இடம்பெறவில்லை. இதனால் களுவிதாரனவின் சர்வதேச கிரிக்கெட் வாழ்க்கை விரைவில் முடிவுக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

தற்போது விக்கெட்காப்பாளராக விளையாடிவரும் குமார் சங்ககார எதிர்வரும் காலங்களில் டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகள் அனைத்திலும் முதல்நிலை விக்கெட் காப்பாளராக விளங்குவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஹசான் திலகரத்ன, திலகரத்ன டில்ஷான் ஆகியோரை மாற்று விக்கெட்காப்பாளர்களாக அணித் தேர்வாளர்கள் தெரிவுசெய்துள்ளனர். 33 வயதான ரொமேஷ் களுவிதாரன இதுவரை 177 ஒருநாள் போட்டிகளில் பங்குபற்றியுள்ளார்.

3 ஆயிரத்து 463 ஓட்டங்களையும் அவர் பெற்றுள்ளார். சராசரி 22.20 ஆகும்.

1996இல் உலகக் கிண்ணச் சம்பியனான இலங்கை அணியில் ரொமேஷ் களுவிதாரன முக்கிய பங்குவகித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

நவம்பர் 30ஆம் திகதிக்கு முன் உலகக் கிண்ணப் போட்டிகளுக்கான 30 பேர் குழாமை அறிவிக்கும்படி சர்வதேச கிரிக்கெட் சபை சகல நாடுகளையும் கோரியிருந்தது.

சுற்றுப்போட்டி விதிகளின்படி 30 பேர் குழாமிலிருந்தே 14 பேர் கொண்ட இறுதி அணி விவரம் அறிவிக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

இறுதி அணி டிசெம்பர் 31ஆம் திகதி அறிவிக்கப்படவுள்ளது.

30 பேர் குழாமிலுள்ள வீரர்கள் விவரம்:

சனத் ஜயசூரிய, மார்வன் அத்தபத்து, ரசல் ஆர்னோல்ட், மஹேல ஜயவர்த்தன, திலான் சமரவீர, உபுல் சந்தன, முத்தையா முரளிதரன், சரித்த புத்திக, தில்ஹார பெர்னாண்டோ, குமார் சங்ககார, ஹசான் திலகரத்ன, சமிந்தவாஸ், சுஜீவ சில்வா, ஹசந்த பெர்னாண்டோ, அவிஷ்க குணவர்த்தன, புலஸ்தி குணரத்ன, அரவிந்த டி சில்வா, குமார் தர்மசேன, மைக்கல் வேண்டோர்ட், ஜெஹான் முபாரக், டி.எம்.தில்சான், கௌசல்யா லொக்கு ஆராச்சி, சமில கமகே, ருச்சிர பெரேரா, பிரசாந் நிஷாங்க, தரங்க லக்சித, திலின துஷார, கௌசல் வீரரட்ண, நவீட் நவாஸ், நுவன் சொய்ஸா. (ஒ)

# விளையாட்டு

## பல்கலை தடகள போட்டி யாழ்ப்பாணம் 3ஆம் இடம்

யாழ்ப்பாணம்,டிசெ.2

இலங்கை பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான தடகளப் போட்டியில் யாழ்.பல்கலைக்கழக அணி மூன்றாம் இடத்தை பெற்றுக்கொண்டது.

அண்மையில் பேராதனைப் பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிகளில் 138 புள்ளிகளை பெற்ற றுகுணு பல்கலைக்கழகமும், பேராதனை பல்கலைக்கழகமும் இணைச்சம்பியன்களாகின. 123 புள்ளிகளைப் பெற்ற யாழ். பல்கலைக்கழக அணி மூன்றாம் இடத்தைப் பெற்றது.

யாழ். பல்கலைக்கழக அணியின் சார்பில் வெற்றியீட்டிய வீரர்கள் பற்றிய விவரம் வருமாறு:-

110மீ தடை தாண்டல், நீளம் பாய்தல், கோலூன்றிப்பாய்தல் ஆகிய போட்டிகளில் எஸ்.ரஞ்சித்குமார் முதலாம் இடத்தினைப்பெற்றுக்கொண்டார். 110மீ தடைதாண்டல் ஓட்டத்தில் இவர் புதிய சாதனை ஒன்றையும் ஏற்படுத்தினார்.

எஸ்.சுதேஸ்வரன் 400மீ தடைதாண்டல், 800மீ ஓட்டம் ஆகியவற்றில் 2ஆம் இடத்தினையும், 400மீ ஓட்டத்தில் 3ஆம் இடத்தினையும் பெற்றார். என்.கிஷோக்குமார், ஜெயதீபன் ஆகியோர் முறையே உயரம் பாய்தல், 100மீ. ஓட்டம் என்பவற்றில் முதலாம் இடத்தினைப் பெற்றனர்.

பெண்கள் பிரிவில் சி.குகாயினி நீளம்பாய்தல், 100மீ தடைதாண்டல் ஓட்டம், முப்பாய்ச்சல் ஆகியவற்றில் முறையே முதலாம், 2ஆம், 3ஆம் இடங்களையும், பி.ஜே.மதிவதனி, 200 மீ., 100மீ. ஓட்டம், நீளம் பாய்தல் போட்டிகளில் முறையே முதலாம் 2ஆம், 3ஆம் இடங்களையும் பி.பிரபா 400மீ போட்டியில் 2ஆம் இடத்தினையும் பெற்றுக்கொண்டனர்.

ஆண்,பெண்களுக்கான அஞ்சல் ஓட்டங்களில் 4x100மீ போட்டிகளில் இரு பிரிவினரும் முதலாம் இடத்தினையும் 4x400மீ போட்டிகளில் ஆண்கள் பிரிவு 3ஆம் இடத்தினையும் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

மேற்படி போட்டிகளில் கலந்துகொண்ட பல்கலைக்கழகங்கள் பெற்றுக்கொண்ட புள்ளிகள் விவரம் வருமாறு

| பல்கலைக்கழகம் | பெற்றபுள்ளிகள் |
|---|---|
| பேராதனை | 138 |
| றுகுணு | 138 |
| யாழ்ப்பாணம் | 123 |
| களனி | 121 |
| கொழும்பு | 99.5 |
| ராஜரட்டை | 42.5 |
| மொறட்டுவ | 38 |
| சப்பிரமுவா | 30 |
| வயம்பா | 12 |
| கிழக்கு | 01 |

## உலகக் கிண்ணம் வெளியிடப்பட்டது

அடுத்த வருடம் நடைபெறவுளள ஐ.சி.சி.உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிகளுக்கான சம்பியன் கிண்ணம் கடந்த 27ஆம் திகதி இந்தியத் தலைநகர் புதுடில்லியில் வெளியிடப்பட்டது.

உலகக்கிண்ணப் போட்டிகளுக்கான அனுசரணையாளர்களாகவுள்ள நான்கு நிறுவனங்களின் ஏற்பாட்டில் இவ்வைபவம் நடைபெற்றது.

60சென்ரிமீற்றர் உயரமான இக் கிண்ணம் தங்கம் மற்றும் வெள்ளியால் செய்யப்பட்டுள்ளது.

தங்கமுலாமிடப்பட்ட பூகோள உருண்டையும் மூன்று வெள்ளித் தூண்களையும் இக்கிண்ணம் கொண்டுள்ளது. பூகோள உருண்டை கிரிக்கெட் பந்தையும், மூன்று தூண்களும் துடுப்பாட்டம், பந்துவீச்சு, களத்தடுப்பு ஆகியவற்றை குறிப்பனவாக அமைந்துள்ளன.

11கிலோ கிராம் எடை கொண்ட இக்கிண்ணத்தின் பெறுமதி 40 ஆயிரம் ஸ்ரேலிங் பவுண்களுக்கும் (சுமார் 60 லட்சம் ரூபா) அதிகமாகும்.

இக்கிண்ணத்தின் அடித்தளத்தில், இதுவரை நடைபெற்ற 6 உலகக் கிண்ணப் போட்டிகளிலும் சம்பியனான அணிகளின் பெயர்கள் பொறிக்கப்பட்டுள்ளன.

உலகக் கிண்ணப் போட்டிகளில் பங்குபற்றும் பல்வேறு நாடுகளிலும் இக்கிண்ணம் காட்சிக்கு வைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிகள் எதிர்வரும் பெப்ரவரி 8ஆம் திகதி தென்னாபிரிக்காவில் ஆரம்பமாகவுள்ளன. (ஒ-5)

## உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி

யாழ்ப்பாணம்,டிசெ.2

யாழ்.உதைபந்தாட்ட லீக் நடத்தும் 'விலகல் முறையிலான' உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி இன்று திங்கட்கிழமை பிற்பகல் 4.30 மணிமுதல் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இன்று நடைபெறும் முதலாவது ஆட்டத்தில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழகமும், யாழ்.பல்கலைக் கழகமும் பங்குபற்றுகின்றன. (ஒ-5)


## பாலர் பாடசாலை ஆசிரியர் தேவை

க.பொ.த. (சா/த) சித்திபெற்ற, முன்னனுபவமுள்ளவர்கள் 10-12-2002 செவ்வாய்க்கிழமைக்கு முன்பாக விண்ணப்பிக்கவும்.

செயலாளர்,
ஏழாலை மத்திய சனசமூக நிலையம்,
ஏழாலை மத்தி.

(11271)



## மதுபாரத் வித்தியா நிலையம்

இந்து மகளிர் ஒழுங்கை,
கந்தர்மடம்.

புதிய கல்வி ஆண்டு 2003
தரம் 6 முதல் O/L வரை
அனுபவமான ஆசிரியர்களின்
ஒழுங்கான போதனைகளில்


ஆரம்பம் : 06.12.2002
வெள்ளிக்கிழமை 3.30 p.m.
கணிதப் பயிற்சி வகுப்பு
ஆரம்ப அறிவில் இருந்து
கற்பிக்கப்படும்.
ஆசிரியர் : கரன்

(11274)


## கண்ணீர் அஞ்சலி

கியூடெக் நிறுவன இயக்குநர்
அருட்திரு. சி.ஜே.ஜெயக்குமார்
அவர்களின் அன்புத் தந்தையார்

### பஸ்தியாம்பிள்ளை கிறிஸ்தோப்பர்



அவர்களின் திடீர் மறைவையிட்டு துக்கத்தில் ஆழ்ந்திருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு, எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்ம சாந்திக்கும் பிரார்த்திக்கின்றோம்.

கொய்யாத்தோட்ட சனசமூக நிலைய அங்கத்தவர்கள்,
முன்பள்ளி ஆசிரியர், மாணவர்கள்.

(11272)


## எழுதுவினைஞர் போட்டிப் பரீட்சை வழிகாட்டல் வகுப்பு

ஆசிரியர் : த.தவசேகர்
ஆரம்பம் : 03.12.2002
செவ்வாய் பி.ப. 1-3 மணி

☆திங்கள் முதல் வெள்ளிவரை 3ஆம் திகதியிலிருந்து 13ஆம் திகதி வரை நடைபெறும்.
☆அச்சடிக்கப்பட்ட குறிப்புகள் கிடைக்கும்.

D.M.I. ஆரியகுளம்சந்தி.

(e/25194)


## நிக்கொட் உதவியுடன்

# நல்லூரில் 200 வீடுகள் விரைவில் நிறுவப்படும்

வலி.வடக்கு,டிசெ.2

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் இருநூறு வீடுகளை அமைத்துக் கொடுப்பதற்கு 'நிக்கொட்' அமைப்பு முன்வந்துள்ளது.

கடந்த காலங்களில் இடம்பெற்ற யுத்த நடவடிக்கைகளின்போது வீடுகள் அழிந்த, வறுமைக்கோட்டின் கீழ் வாழ்பவர்களுக்கு இந்தத் திட்டத்தின்கீழ் வீடுகள் அமைத்துக் கொடுப்பதற்கான முன்னேற்பாட்டு நடவடிக்கைகளை பிரதேச செயலகம் ஆரம்பித்துள்ளது.

அரியாலைப் பகுதியில் தற்போது அழிவடைந்து சேதமடைந்து காணப்படும் வீடுகளில் ஒரு பகுதியும் இத திட்டத்தின் கீழ் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளது.

அரியாலைப் பகுதி கிராம அலுவலர்கள் முழுமையாக வீடுகள் உடைந்த வறுமைக்கோட்டுக்கு உட்பட்டவர்களின் பெயர் விவரங்களைச் சேகரித்து வருகின்றனர். (எ-86)

## வேம்பொடுகேணி பாடசாலை தொடர்ந்து பளையில்!

தென்மராட்சி,டிசெ.2

வேம்பொடுகேணி சீ.சீ.த.க. பாடசாலை தொடர்ந்தும் பளையிலேயே இயங்குமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இத்தாவிலில் இருந்த பாடசாலைக் கட்டடம் முழுமையாக சேதமடைந்துள்ளதால் விளையாட்டு மைதானப் பகுதியில் புதிய கட்டடங்கள் அமைக்கப்படவுள்ளதாகவும் -

அதுவரை பாடசாலை தொடர்ந்து பளையில் இயங்கும் இடத்திலேயே இயங்குமென்றும் - அதிபர் சி.இராமலிங்கம் அறிவித்துள்ளார்.

விளையாட்டு மைதானம் அமைந்துள்ள பகுதியில் மிதிவெடி அபாயம் உள்ளதால் இப்பகுதியில் மிதிவெடி அகற்றும் பணிகள் முடிவடைந்த பின்னரே வகுப்பறைகள் அமைக்கப்படுமெனவும் அவர் தெரிவித்தார். (ஒ-117)

## பாலர் பாடசாலை ஒன்றுகூடல்

வலிகாமம்தெற்கு,டிசெ.2

உடுவில் இந்து இளைஞர் மன்ற பாலர் பாடசாலையின் வருடாந்த ஒன்றுகூடல் நாளை மறுதினம் புதன் கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு உடுவில் மான்ஸ் மகாவித்தியாலயத்தில் திருமதி கு.விநாயகச்செல்வம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்தவிழாவில் கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி ஆசிரியர் ஆறு.திருமுருகன் பிரதம விருந்தினராகவும், சைவப்புலவர் க.சத்தியதாசன், சமூகஜோதி கா.கணேசதாசன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் நா.பத்மநாதன் கௌரவ விருந்தினராகவும் கலந்துகொள்வர்.

மாணவர்களின் நடனம், காவடி ஆட்டம், நாடகம், ஆங்கில நிகழ்ச்சிகள் என்பனவும் இடம்பெறவுள்ளன. (எ-152)


## TRUE LIGHT MISSION
## மெய்யான ஒளி மிஷன்

ஏசாயா 41:14 கூறிய வார்த்தையின்படி பயப்படாதே நான் உனக்குத் துணை நிற்கிறேன் என்ற வாக்குப்படி தேவன் கடந்த மூன்று வருடத்திலும் வழி நடத்தினார். அவருக்கே நன்றிகள்.

3ஆவது ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு தாய், தகப்பன் இல்லாத பிள்ளைகளுக்கு மிஷனில் இணைந்து கொள்ள இடமுண்டு.

☆*விண்ணப்பங்களை 15.12.2002இற்கு முன்பாக அனுப்பிவைக்கவும்.*
☆*வெற்றிடங்கள் குறைவாகவே உள்ளன.*
☆*பராமரித்தல் இலவசம்.*

நிர்வாகி,
டாக்டர் சுப்பிரமணியம் வீதி,
சுன்னாகம்.

(11273)


# மரண அறிவித்தல்கள்

## திருமதி ஸ்கொலாஸ்த்திக்கம்மா மோசேஸ்

இல.38, 5ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திருமதி ஸ்கொலாஸ்த்திக்கம்மா மோசேஸ் அவர்கள் நேற்று (01-12-2002) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற அலேசு மோசேஸ் அவர்களின் அன்பு மனைவியும் யேசுதாசன், மரியபுஸ்பம், ஸ்ரனிஸ்லோஸ், றோஸ் லூசியா, பயினம்மா, இராசதாசன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் எட்வீசம்மா, ஜெறோம், புனிதம் ஜெயநாயகி (காலஞ்சென்ற பிரான்சிஸ்), ஜெகனி ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (03-12-2002) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு மணற்காடு புனித அந்தோனியார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.38, 5ஆம் குறுக்குத்தெரு,*
*யாழ்ப்பாணம்.*

(11269)

தகவல்:
பிள்ளைகள்.

## தவசிபாலன்

(இளைப்பாறிய கூட்டுறவு ஊழியர்)

ஆவரங்காலைப் பிறப்பிடமாகவும், அச்சுவேலியை வசிப்பிடமாகவும் கொண்ட தவசிபாலன் அவர்கள் நேற்று (01-12-2002) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் செம்பி அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற (வல்லி) (சீதவி) சந்தி ஆகியோரின் சகோதரனும் பாலன், சிவப்பி ஆகியோரின் மைத்துனரும் மகாலிங்கம், வள்ளியம்மை, சரஸ்வதி, கந்தசாமி (லண்டன்), சிவபாதம் (சுவிஸ்), ரஞ்சினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் நடராஜா, சிவசுப்பிரமணியம், இராசலிங்கம், மாசில் (இந்தியா), பூபதி (சுவிஸ்) ஆகியோரின் மாமனாரும் கல்யாணி, கமலகுமார், புனிதவதி (லண்டன்), கஜந்தினி, கஜனிகா, பிரபாகரன், பூலோகராணி (ஹொலண்ட்), கிருபாகரன், கருணாகரன், சஞ்சயகரன், ஜெனி, ஜெடா, ரிசோபன் (இந்தியா), வசீகரன், செந்தூரன், ஸ்ரீசுதன், காயத்திரி, கபிலன், கிரிஷாந்தன் (சுவிஸ்), ஜானுகா, பானுஜா, டிசாந்தன், கீதன் ஆகியோரின் பேரனும் மீனுஜா, மேகலா ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02-12-2002) திங்கட்கிழமை முற்பகல் 10மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆவரங்கால் கரதடி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நெல்லியோடை,*
*அச்சுவேலி தெற்கு.*

(11270)

தகவல்:
சிவபாதம் (மகன்)

## குளமங்கால்
## புனித சவேரியார் ஆலய வருடாந்த திருவிழாவும் பீட அபிஷேக பவளவிழாவும்
## 1942 - 2002

இன்று 02.12.2002 திங்கட்கிழமை நற்கருணை விழா மாலை 5.30 மணிக்கு செபமாலையுடன் ஆரம்பமாகும்.

03.12.2002 செவ்வாய்க்கிழமை திருவிழாத் திருப்பலி காலை 7.00 மணிக்கு ஆரம்பமாகும்.

புனிதரின் ஆசீர் பெறவருமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**பங்குத் தந்தையும் பங்கு மக்களும்.**

(11262)

## வலி.மேற்குவாழ் ஆங்கிலப் பிரியர்களுக்கு ஓர் இன்ப அதிர்ச்சி!

அழகு தமிழை தாய்மொழியாகக்கொண்ட மாணவர்களுக்கு ஆங்கிலத்தைக் கற்பிக்கும் கலையின் காரணமாக மக்களின் மனங்களைக் கவர்ந்த "ENGLISH ACADEMY" 07.12.2002 முதல் சித்தங்கேணியிலும் (பாரதி கல்வி நிலையத்திற்கு முன்) தனது பாதங்களை பதிக்கவுள்ளது.

மாணவமணிகளின் மனங்களில் குடிகொண்டுள்ள 'ஆங்கிலம்' என்ற அச்சத்தை அகற்றி, அதில் அடைவுமட்டத்தை உயர்த்துவதே எமது தலையாய நோக்கம். இதற்கு அனைவரது ஒத்துழைப் பையும் அவாவுடன் எதிர்பார்ப்பதுடன், பெறுமதிமிக்க விமர்சனங் களையும் மனதுவந்து வரவேற்கிறோம்.

தரம் 6 முதல் A/L, பல்கலை மற்றும் அலுவலர் வரை நாளை தொடக்கம் காலை 10 மணி முதல் நண்பகல் 12 மணி வரை பதி வுகளை மேற்கொள்ளலாம்.

English Academy
E.mail: thangan 672002 @ yahoo.com
**T.P: 021-222 2588**

210, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
Director
S.சிவச்செல்வன்

கிளை:- சித்தங்கேணி
Teacher
K.T.ராஜா (SS)

(11281) *Why fear! we are here;* யாமிருக்கப் பயமேன்!

## குழந்தை யேசுவுக்கு நன்றிச் செபம்

கனிவு நிறைந்த குழந்தை யேசுவே! என்மேல் நீர் பொழிந் தருளிய எல்லா நன்மைகளுக்காகவும் முழந்தாளிட்டு உமக்கு மனம் நிறைந்த என் நன்றியைச் செலுத்துகின்றேன். உமது இரக்கத்தை நான் என்றும் போற்றிப்புகழ்வேன். நீர் ஒருவனே என் இறைவன்; என் துணைவன்; என் புரவலன் என்று பறைசாற்றுவேன். என் நம்பிக்கை எல்லாம் இனி உம் கையிலேதான். உமது இரக்கத்தையும் வள்ளன்மையை யும் பெரும் செயல்களையும் எல்லோரும் ஏற்றுப் போற்று வார்களாக. குழந்தை யேசுவின் பக்தி மக்கள் உள்ளங் களிலெல்லாம் அதிகமாகப் பரவுவதாக; உமது உதவியைப் பெற்று மகிழும் அனைவரும் உமது குழந்தைப் பருவத்திற்கு என்றும் நன்றியுடையவர்களாக இருப்பார்களாக; என்றென்றும் அவர்கள் உம்மைப் போற்றி மகிமைப்படுத்து வார்களாக.

ஆமென்

(11279)

# மரண அறிவித்தல்கள்

## கைலாயர் கதிராசிப்பிள்ளை

சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கைலாயர் கதிராசிப்பிள்ளை 01.12.2002 இல் காலமானார்.

அன்னார் ஐயாத்துரை, காலஞ்சென்ற நாகம்மா ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்றவர்களான இராசரத்தினம், சுப்பிரமணியம், மற்றும் திலகவதி ஆகியோரின் அன்பு சிறிய தாயாரும் சிவராசாவின் அன்பு மாமியாரும் சுரேஸ்குமார், சதிஸ்குமார், ராஜ்குமார், மாதங்கி ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.12.2002) திங்கட்கிழமை மாலை 3.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*புளியந் தோட்டம்,*
*சுன்னாகம்.*
(C/25197)

தகவல்:
சிவராசா
(குட்டி)

## நாகமணி கந்தையா

கனகசபை வீதி, மானிப்பாயைப் பிறப்பிடமாகக் கொண்ட நாகமணி கந்தையா அவர்கள் நேற்று (01.12.2002) ஞயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகமணி - சூசானத்தின் மூத்த மகனும் காலஞ்சென்ற கமலத்தின் அன்புக் கணவரும் நகுலேஸ்வரியின் (மாலா) அன்புத் தந்தையும் தவறாஜாவின் மாமனாரும் அபிசேக்கின் அன்புப பேரனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.12.2002) திங்கட்கிழமை பி.ப.1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிப்பிலி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

*கனகசபை வீதி,*
*மானிப்பாய்.*
(11285)

தகவல்:
ஆ.தவறாஜா
(மருமகன்)

## திருமறைக்கலாமன்ற தினம்

யாழ்ப்பாணம்,டிசெ.2

அகில இலங்கை திருமறைக் கலா மன்ற தினம் நாளை அனுஷ்டிக்கப் படவிருக்கின்றது.இதனை ஒட்டி யாழ்ப பாணம் திருமறைக் கலாமன்றத்தில் பல்வேறு நிகழ்வுகள் நடைபெறவிருக கின்றன.

நாளை காலை 7மணிக்கு மன்றக் கலைத்தூது மண்டபத்தில் விஷேட ஆராதனையும் அதனைத் தொடர்ந்து மன்ற வளாகத்தில் மரநடுகை வைபவ மும் இடம்பெறும்.

மாலை 6.30மணிக்கு 'தாலேலோ' என்ற ஒலிப்பதிவு நாடாவெளியீடும் 'ஆற்றுகை' நாடகமும் அரங்கியலுக் கான விழாவும் இடம்பெறும்.

அதனைத்தொடர்ந்து பல்வேறு கலை நிகழ்வுகளும் ஏற்பாடு செய் யப்பட்டுள்ளன. இந்த நிகழ்வுகளில் மன்றங்களின் அங்கத்தவர்கள் மற் றும் ஆர்வலர்களைக் கலந்து கொள ளுமாறு அழைப்பு விடுக் கப்பட்டுள் ளது. (ஐ-4)

## கிராம சங்கங்கள் புனரமைப்பு

தென்மராட்சி,டிசெ.2

பளைப் பிரதேசத்தில் மக்கள் மீளக்குடியமர்ந்துள்ள பகுதிகளில் கிராமிய அபிவிருத்திச் சங்கங்கள், மகளிர் கிராமிய அபிவிருத்திச் சங்கங் கள் ஆகியவை பிரதேச செயலக கிராமிய அபிவிருத்திப் பிரிவினரால் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

முகாவில், வண்ணான்கேணி, கச் சார்வெளி, செல்வபுரம் ஆகிய கிரா மிய அபிவிருத்திச் சங்கங்கள், முகா வில், வண்ணான்கேணி, கச்சார்வெளி மகளிர் கிராமிய அபிவிருத்திச் சங்கங் கள் ஆகியவை புனரமைக்கப்பட்டுள் ளன என்று பிரதேச செயலக நிர்வாக அலுவலர் தா.சுவாமிநாதன் தெரிவித தார். (ஐ-117)

புதிய **நாவலர்** கல்வி நிலையம்
*ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.*

புதிய நிர்வாகத்தின் கீழ்
விசேட நடைமுறைகளுடன்
**தரம் 1 முதல் O/L வரை**

புதிய வகுப்புகள் ஆரம்பம்
**05-12-2002**
வியாழன் பிற்பகல் 3-30 மணி

**O/L ஆசிரியர் குழு**
- கணிதம் — திரு. K.P.S.விஜயன்
- விஞ்ஞானம் — திரு. E.J.K.யுபன்
- சமூகக்கல்வி — திரு. K.சுதன்
- தமிழ் — திரு. W.ஜெயபால்
- ஆங்கிலம் — திரு. K.றமணதாசன்
- சமயம் — திரு. S.செல்வக்குமார்
- வர்த்தகம் — திரு. M.மோகன்

புதிய அனுமதிகள் இன்றுமுதல் வழங்கப்படும். (11282)

## உழவு இயந்திரம் விற்பனைக்கு

நல்லநிலையிலுள்ள உழவு இயந் திரம் (டிராக்டர்) பெட்டியுடன் விற்பனைக்கு உண்டு. விலை நேரில் பேசிக்கொள்ளலாம்.

*தொடர்பு:*
திரு.த.சந்திரன்
ஸ்ரீ நாகவிகாரையடி,
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம். (11275)

**நாகம்ஸ்** சுன்னாகம்
அர்ஜுன், திவ்யா, சார்லி, கவுண்டமணி நடித்த
**தாயின் மணிக்கொடி** (ரீலஸ்)
காட்சிகள்: 11.00, 3.00
விசேட காட்சிகள்: வெள்ளி, சனி, ஞாயிறு 6.30 (புதிய நேரம்) (11222)

**ராஜா** யாழ்ப்பாணம்.
அஜித் (இருவேடங்களில்), மீனா நடித்த

**வில்லன்** (ரீலஸ்)
கா.நே.: 10.30, 2.30, 6.30 (புதிய நேரம்)

**நிறைஞ்சனாஸ்** சங்கானை
அஜீத், மீனா நடிக்க
**சிற்றிசன்**
காட்சிகள்: 11.00, 2.45, 6.00 (புதியநேரம்) (C/25185)

## எழுதுவினைஞர் சேவை போட்டிப் பரீட்சை
### பயிற்சி வகுப்புகள்

ஆரம்பம்:- 03-12-2002 (செவ்வாய் - வெள்ளி வரை).

| காலை 9.00 மணி(பு.நே) | மாலை 4.00 மணி(பு.நே) |
|---|---|
| *நியூட்டன் உயர்கல்வி நிறுவனம், ஆரியகுளம் சந்தி அருகில், யாழ்நகர்.* | *திகழ் கல்வி நிறுனம், K.K.S வீதி, இணுவில்.* |

இங்கே கையேடுகள் கிடைக்கும் (11267)

# மரண அறிவித்தல்கள்

## முத்தையா கனகரெட்ணம்

சரவணையைப் பிறப்பிடமாகவும் கேசாவில் பிள்ளையார் கோவிலடி, வண்ணார்பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட முத்தையா கனக ரெட்ணம் அவர்கள் 30.11.2002 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்தையா - இளையபிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும், திருமதி தவநாயகியின் அன்புக் கணவரும் சின்னம்மா, பராசக்தி, துரைராஜா, துரைமணி, ஸ்ரீதேவி காலஞ்சென்றவர்க ளான கருணைநாயகி கமலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும் சுதந்திரராஜா, இந்திராணி, தவராஜா ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜீவரெத்தினம், புஸ்பராணி ஆகியோரின் அன்பு மாமனாரும் சுதர்ஜினி, லவஜீவ், ஜீவிதா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.12.2002) திங்கட்கிழமை பி.ப. 1.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக கிரியைக்காக கோம்பையன் மணல் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*07, காரைக்காட்டு லேன்,*
*வண்ணார் பண்ணை,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
க.சுதந்திரராஜா (மகன்)
(யாழ்.பல்கலைக்கழக ஊழியர்)
(11286)

## சிதம்பரப்பிள்ளை சதாசிவம்
### (புத்திசாலி)

வண்ணார்பண்ணை, தட்டாதெருவைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிதம்பரப்பிள்ளை சதாசிவம் (புத்திசாலி) 30.11.2002 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் கமலாதேவியின் அன்புக் கணவரும் சிதம்பரப்பிள்ளை - நாகம்மா தம்பதிகளின் அன்பு மகனும் வசந்தகுமாரன், சாந்தகுமாரன் காலஞ்சென்ற சிவகுமாரன் மற்றும் விஜயகுமாரன், நந்தகுமாரன் காலஞ் சென்ற தேவகுமாரன் மற்றும் இராஜகுமார், ரேவதி ஆகியோரின் அன்பு தகப்பனாரும் காமாட்சி அம்மா காலஞ்சென்ற சண்முகரத்தினம் மற்றும் சரஸ்வதி, தனலட்சுமி, நகுலேஸ்வரி, காலஞ்சென்றவர்களான தியாக ராசா, ஜெயக்குமரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.12.2002) திங்கடகிழமை பி.ப. 4.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக கிரியைக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*572, கே.கே.எஸ். வீதி,*
*தட்டாதெரு, யாழ்ப்பாணம்.* (11283)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

## புற்றிடங்கொண்டார் சுப்பிரமணியம்
### (இளைப்பாறிய கிராம விதானையார்-வேலணை)

வேலணை கிழக்கு, இராசையா வீதியைப் பிறப்பிடமாகவும் 261/6, கண்டி வீதி,அரியாலையை வசிப்பிடமாகவும் கொண்ட புற்றிடங்கொண்டார் சுப்பிரமணியம்(இளைப்பாறிய கிராம விதானையார்-வேலணை கிழக்கு) அவர்கள நேற்று (01.12.2002)ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான புற்றிடங்கொண்டார் - நாகம்மா தம்பதி களின் அன்பு மகனும், காலஞ்சென்ற பரமேஸ்வரியின் அன்புக்கணவரும் பவனராணி(கனடா),சண்முகதாஸ்(குகன் களஞ்சியம் - திருநெல்வேலி), முருகானந்தன் (கனடா),குமாரதாஸ் (கனடா)ஆகியோரின் அன்புத் தந்தை யாரும் பரம்சோதி (கனடா), தேவகி,பவானி (கனடா),ருக்மணி (கனடா), ஆகியோரின்அன்பு மாமனாரும் Dr .கௌசல்யா (கனடா),குகன் (கனடா), லாவண்யா (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை A/L 2004), துஷ்யந்தன (யா/இந்துக்கல்லூரி-தரம்-11), பைரவி (கனடா),பாரதி (கனடா), சுஜன் (கனடா), சுகன்யா (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர் களான ஆறுமுகம், முருகேசு, தங்கம்மா மற்றும் இராசம்மா (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.12.2002) திங்கட்கிழமை இல.261/6, கண்டி வீதி, அரியாலையில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக பி.ப.3 மணியளவில் செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*261/6,கண்டி வீதி,*
*அரியாலை.* (11277)

தகவல்:-
சு.சண்முகதாஸ்(மகன்)

## தம்பிப்பிள்ளை நவரத்தினம்
### (ஓய்வுபெற்ற பொலீஸ் சார்ஜன்ட்)

பொன்னாலை மேற்கைப்பிறப்பிடமாகவும் சங்கானை கிழக்கு, கூடத்து அம்மன் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிப்பிள்ளை நவரத்தி னம் நேற்று(01-12-2002) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் தியாகேஸ்வரியின் அன்புக்கணவரும் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை - வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மகனும் பிரதாபன் (யாழ்.இந்துக்கல்லூரி A/Lமாணவன்), கார்த்திகா (உடுவில் மகளிர் கல்லூரிA/L மாணவி), பிரகலாதன் (சென்.ஜோன்ஸ் கல்லூரி 10ஆம் ஆண்டு மாணவன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான கந்தையா, குமாரசுவாமி மற்றும் கோபாலரத்தினசிங்கம் (இந்தியா), விஜயரத் தினம் (ஜேர்மனி), தெய்வேந்திரசிங்கம் (பொலஸ் சார்ஜன்ட், திருகோண மலை), மனோன்மணி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர் களான விநாயகமூர்த்தி (லண்டன்), பஞ்சரத்தினம் (சுவிஸ்) மற்றும் சோமசுந் தரம்(பிரபலசோதிடர், கொழும்பு), பாலசுப்பிரமணியம் (ஓய்வு பெற்ற களஞ்சியப் பொறுப்பாளர்.சுன்னாகம்), சிவசுந்தரம் (ஓய்வுபெற்ற காப்பாளர், இ.போ.ச), சண்முகரத்தினம் (வருமான மேற்பார்வையாளர் - பிரதேச சபை, சுழிபுரம்), தேவராசா (மரக்கூட்டுத்தாபனம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02-12-2002) திங்கட்கிழமை பி.ப.1.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக கிரியைக்காக சங்கானை கரச்சி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கூடத்தம்மன்*
*கோயிலடி,*
*சங்கானை.* (11284)

தகவல்:
மனைவி, மக்கள்,
மைத்துனர்கள்

# ஹக்கீமை நீக்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவருடைய அனுமதியுடனேயே ரவூப் ஹக்கீம் பேச்சுகளில் கலந்து ஜெனீவாவில் இலங்கை திரும்புகிறார். ரவூப் ஹக்கீமை தலைமை பதவியிலிருந்து இறக்குவதற்கு ஆதரவு தேடுவதற்காக முஸ்லிம் காங்கிரஸின் அரசியல் அதியுயர்பீடக் கூட்டத்தைக் கூட்டுமாறு தவிசாளர் அதாவுல்லா, செயலாளர் நாயகம் ஹப்ரத்தைக் கேட்டிருந்தார்.

இது ஹக்கீமின் காதில் எட்டவே அவர் கூட்டத்தைக் கூட்டுவது தவறு என்றும், அப்படிச் செய்யவேண்டாம் என்றும் ஆலோசனை கூறியிருக்கிறார்.

அதை ஒப்புக்கொண்ட ஹப்ரத், பின்னர் ஹக்கீம் ஒஸ்லோவிற்குப் புறப்பட்டதும் கூட்டத்தைக் கூட்டும் முயற்சிகளில் ஈடுபட்டார் என்றும் தெரியவந்திருக்கிறது.

இது மட்டும் அல்லாமல் ஹக்கீமைத் தலைமைப் பதவியிலிருந்து நீக்குவதற்கு அரசியல் அதியுயர்பீட உறுப்பினர்கள் ஐவரிடம் கையொப்பமிட்ட ஆதரவுக் கடிதம் பெற்றிருக்கிறார் என்றும் காங்கிரஸ் தலைமைக்குத் தெரியவந்திருக்கிறது.

இந்த நிலைமையை வளர விட்டால் கட்சிக்கும் கட்சியை நம்பியிருக்கும் முஸ்லிம் சமூகத்துக்கும் ஏற்படக்கூடிய தீமைகளைக் கருத்தில் கொண்டே ஹக்கீம் உடனடியாகக் கட்சித் தவிசாளரையும் செயலாளர் நாயகத்தையும் கட்சியிலிருந்தும் கடசிப் பதவியிலிருந்தும் இடைநிறுத்தும் நடவடிக்கையை எடுத்திருக்கிறார்.

இருவரிடமிருந்தும் விளக்கம் கேட்டு கடிதங்களை அனுப்பவும் ஏற்பாடாகி வருகிறது. (ஐ-9)

# இங்கு என்ன...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசு இவை எல்லாவற்றையும் கண்டும் காணாமல் இருந்து வருகிறது. காலம் போகப்போக நிலைமை இன்னும் மோசமாகத்தான் போகப் போகிறது. அவர்கள் தங்கள் நிலையை மேலும் வலுப்படுத்திக் கொள்ளப் போகிறார்கள்.

*கேள்வி:-* இதற்கு இந்தியா என்ன செய்ய வேண்டும் எனஎதிர் பார்க்கிறீர்கள்?

*பதில்:-* இந்தியா ஏதும் செய்ய வேண்டும் என்று நாங்கள் எதிர் பார்க்கவில்லை. நாங்கள் என்ன செய்கிறோம் என்றால், எங்களுடைய நிலைப்பாட்டை இந்தியாவுக்கு தெரிவிக்கிறோம். பிரதமர் ரணிலின் அரசினுடைய இந்தப்போக்கால் எவ்வளவு பூதாகரமான நிலைமை உருவாகப் போகிறது என்று அவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும் - என்று விரும்புகின்றோம். (ஐ-9)

## எரியுண்டு காயம்!

யாழ்ப்பாணம்,டிசெ.2

மதுபோதையில் இருந்தவர் தனகுத்தானே தீமூட்டினார் என்று கூறப்படும் சம்பவத்தில் ஒருவர் உடல் பூராகவும் எரிந்து படுகாயமடைந்தார்.

புங்குடுதீவில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இச்சம்பவத்தில் கார்த்திகேசு சிவசுந்தரம் (வயது-28) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையே படுகாயமடைந்தவராவார். இவர் ஆபத்தான நிலையில் யாழ்போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஐ-15)

## சமாதான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்று திங்கட்கிழமை ஒஸ்லோவில் இலங்கை அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் நடைபெறவிருக்கும் சமாதானப் பேச்சுக்களின் விவரங்கள பற்றியும் அவர் இந்திய அமைச்சருக்கு விளக்கியிருக்கிறார்.

இலங்கையில் நடைபெற்றுவரும் சமாதான நடவடிக்கைகளை இந்திய அரசுக்கு தெரிவிக்கும் முகமாக இந்த தகவல் பரிமாற்றம் இடம்பெற்றதாக இந்திய வெளிவிவகார அமைச்சின் செய்திக் குறிப்பு தெரிவித்தது.

# மூன்றாம் சுற்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்றைய சமாதானப் பேச்சுக்கள் குறித்து அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் கருத்துத் தெரிவிக்கையில் கூறியதாவது:-

பேச்சுக்களின் முக்கிய கட்டத்தை இரு தரப்பினரும் அடைந்துள்ளோம். இந்தப் பேச்சுக்களில் அரசியல் விவகாரங்களைத் தவிர வடக்கு - கிழக்கின் பாதுகாப்பு விடயங்கள் குறித்தும் ஆராயப்படும். இலங்கையின் சமாதான முயற்சிகளுக்கு சர்வதேச மன்னிப்புச்சபை பூரண ஆதரவு வழங்கும்.

வடக்கு - கிழக்கில் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கு அரசுடனும் புலிகளுடனும் இணைந்து சர்வதேச மன்னிப்புச்சபை பங்காற்றும். இவ்வாறு அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

சமாதானப் பேச்சுக்கள் குறித்து புலிகளின் அரசியல் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் கருத்துத் தெரிவிக்கையில் -

இன்று நடைபெறவுள்ள பேச்சுக்களில் நாம் எடுக்கப்போகும் தீர்மானங்கள்தான் எங்களுக்கு மேலும் நம்பிக்கையையும் மகிழ்ச்சியையும் ஏற்படுத்தும் - என்றார்.

புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி கேணல் கருணா கருத்துத் தெரிவிக்கையில் -

இதுவரை இடம்பெற்ற பேச்சுக்கள் எமக்கு நம்பிக்கையைத் தந்துள்ளன. எடுக்கப்பட்ட முடிவுகள் நடைமுறைப் படுத்தப்படவேண்டும். அவை அமுலுக்கு வரும்போது மக்களுக்கு பேச்சுக்களில் கூடிய நம்பிக்கை ஏற்படும். எனவே, எடுக்கப்பட்ட முடிவுகளை அமுல்படுத்துவது தொடர்பாகவே இந்தப் பேச்சுக்களின்போது ஆராயப்படவுள்ளது - என்றார். (ஐ-9)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

உடுவில் பிரதேச செயலர் பிரிவில் நிர்வாக உத்தியோகத்தராகக் கடமையாற்றி இன்று உடுவில் பிரதேச செயலராகப் பதவியேற்கும்

**திரு.S.R.ஜெயப்பிரகாசம்**

அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதோடு அவர் மேன்மேலும் பதவி உயர்வுகள் பெற எல்லாம் வல்ல இணுவில் ஸ்ரீ பரராஜசேகரனை இறைஞ்சுகின்றோம்.

கிராம அலுவலர் - இணுவில் தென்மேற்கு. (J/188)
இணுவில் பொது நூலகம்.
இணுவில் கிராம அபிவிருத்திச் சங்கம்.
திருநெறிய தமிழ்மறை கழகம்.
ஸ்ரீ கணேசா இளைஞர் சேவை மன்றம்.
இணுவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்.
இணுவில்.

(C/25198)

## கணனி வகுப்புகள்

பாடசாலை விடுமுறையை முன்னிட்டு ஆசிரியர்களுக்கான, மாணவர்களுக்கான பிரத்தியேக கணனி வகுப்புகள ஆரம்பமாகின்றன. தனியாக, சிறு குழுக்களாகக் கற்பிக்கப்படும்.

தொடர்பு:
சென்ற். ஆன்ஸ் சேர்ச் முன்பாக,
மானிப்பாய் தெற்கு,
மானிப்பாய். (11245)

## எலைற் கல்வி நிறுவனம்

*147, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.*

புதிய கல்வியாண்டு - 2003
தரம் 3 முதல் O/L வரை
அனைத்து வகுப்புகளும்.

ஆரம்பம்:- **05.12.2002**
வியாழன் காலை 8.00 மணி

(11212) -நிர்வாகி-

## விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்.

**கல்வியாண்டு 2003** *O/L* தரம் **10,9,8,7,6**

ஆரம்பம்: 5.12.2002 9 மணி சனி, ஞாயிறு வகுப்புகள் O/L, 10
ஆரம்பம்: 7.12.2002 8 மணி 8 மணி - 3 மணிவரை

* விடுமுறை நாள்களில் அனைத்து வகுப்புகள் காலை 9 மணி - 1 மணிவரை நடைபெறும்.
* தூரத்து மாணவர்கள் (தீவுப்பகுதி, தென்மராட்சி, வடமராட்சி) மற்றும் அனைத்து மாணவர்களும் இப்பிரிவில் அனுமதிக்கப்படுவர்.
* சனி, ஞாயிறு வகுப்புகள் 3 பிரிவு மட்டும்.
* இன்று தொடக்கம் அனுமதிகளை பெற்றுக்கொள்ளலாம். (C/25143)


## BUSINESS DEVELOPMENT OFFICER NEW UTHAYAN PUBLICATION (PVT) LTD

This is to Inform the General Public That Mr.M.Sriskanda Kumar (B.Sc.Agri) Of 243, Navalar Road Jaffna. Is no Longer Entitled to Canvass Advertisements on Behalf of The News Papers Published By The New Uthayan Publication ( Pvt ) Ltd, From 06-11-2002.

New Uthyan Publication (Pvt) Ltd Will not be Responsible For Any Transactions Entered Into With Him With Effect From 6th November 2002.

**MANAGING DIRECTOR**
**NEW UTHAYAN PUBLICATION (PVT) LTD**

(C-25196)


# RAMCO CEMENT
# ராம்கோ சிமெந்து

இலங்கையில் மட்டுமா இல்லை

இந்தியாவில் மட்டுமா இல்லவே இல்லை

ஆசியாவில் முதலாம் தர (நம்பர் 1) தொழிற்சாலையாக தெரிவுசெய்யப்பட்ட தொழிற்சாலையால் உற்பத்தி செய்யப்படும் **RAMCO சிமெந்து (கோபுரமார்க்)** என்பதை மக்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

எமது வாடிக்கையாளர்களுக்கு! ராம்கோ சிமெந்து வந்துவிட்டது!
முன்கூட்டியே பதிவு செய்யவும்! போக்குவரத்து விநியோகம் இலவசம்!!

*முக்கிய குறிப்பு :*
குடாநாட்டு மக்களின் பல கோடி ரூபா பணத்தை மீதப்படுத்திய சிமெந்து ராம்கோ சிமெந்து

ராம்கோ சிமெந்து ஏக இறக்குமதியாளர்

# ஈஸ்வரபகவான் & கொம்பனி

**91, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம், T.P.: 021 222 2350**


(C/11147)

MCS MCS MCS MCS MCS MCS MCS MCS MCS MCS MCS

324,பலாலிவீதி, யாழ்ப்பாணம் (பரமேஸ்வராச்சந்தி அருகே, மேல்மாடியில்)

# சிறாருக்கான கணனிப்பயிற்சி

ஆரம்பம
04.12.2002
மு.ப 9.00
மணிக்கு



SOW SOW SOW SOW SOW SOW SOW SOW SOW SOW


# மரண அறிவித்தல்கள்

## வை. சரவணமுத்து

(சாஸ்திரியார் மட்டுவில் கிழக்கு)

சரசாலையைப் பிறப்பிடமாகவும் மட்டுவில் கிழக்கை நிரந்தர வசிப்பிடமாகவும் வண்ணார்பண்ணை, சிவலிங்கப்புளியடியை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட வை.சரவணமுத்து (ஓய்வுபெற்ற ஆசிரியர்) அவர்கள் நேற்று (01-12-2002) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் தங்கம்மாவின் அன்புக்கணவரும், Dr.செல்வி ம. சரவணமுத்து (யாழ். போதனாவைத்தியசாலை கண் சிகிச்சை நிலையம்), மங்களாதேவி ஆகியோரின் அன்புத் தந்தையும், வ.சிவப்பிரகாசம் அவர்களின் மாமனாரும், யதுகுலன், விஷ்ணுகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02-12-2002) திங்கட்கிழமை பிப.4.00 மணியளவில் அவரது தற்காலிக இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றர், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சிவலிங்கப்புளியடி,*
*வண்ணார்பண்ணை.*
*யாழ்ப்பாணம்.* (11287)

தகவல்:
Dr.செல்வி ம.சரவணமுத்து(மகள்)
(யாழ்.போதனா வைத்தியசாலை)

## மூத்ததம்பி அருட்பிரகாசம்

(சிறுப்பிட்டி வடக்கு, நீர்வேலி)

சிறுப்பிட்டி வடக்கு, நீர்வேலியைச் சேர்ந்த மூத்ததம்பி அருட்பிரகாசம் அவர்கள் நேற்று (01.12.2002) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மூத்ததம்பி - சிவகாமி தம்பதியினரின் மகனும் காலஞ்சென்ற தங்கரத்தினத்தின் அன்புக் கணவரும் கிருஷ்ணராஜாவின் (கிருஷ்ணா - சுவிஸ்) அன்புத் தந்தையும் காலஞ்சென்ற மாசிலாமணியின் அன்புச் சகோதரரும் தங்கராஜா (இளைப்பாறிய அதிபர், சமாதான நீதிவான்), மனோண்மணி , ஊரிக்காட்டைச் சேர்ந்த ருக்குமணி, மகேந்திரம்மா, கட்டியம்மா, குட்டியம்மா, பரமசிவம் மற்றும் காலஞ்சென்ற லீலா ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்றவர்களான சிவக்கொழுந்து - வள்ளியம்மை ஆகியோரின் அன்பு மருமகனும் சிவஞானேஸ்வரியின் (சாந்தி) அன்பு மாமனாரும் கிரிசாந்தன், கிரிசாந்தினி, கீர்த்தனன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேரனும் குலமணி (U.S.A), காலஞ்சென்ற கண்மணி ஆகியோரின் ஒன்று விட்ட சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.12.2002) திங்கட்கிழமை பி.ப. 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கிந்தி சிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*"ராஜகிரி"*
*சிறுப்பிட்டி வடக்கு,*
*நீர்வேலி.* (11288)

தகவல்:
அ.கிருஷ்ணராஜா
(மகன் -மோகன்)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 02.12.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.